# விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 319
தேசிய தினசரி

வசம்பாவைம் மார்கழி 13 ஷவ்வால் 28 திங்கட்கிழமை (28-12-70)




## ஜனவரி முதல் வழங்கப்படும்

கோட்டை, ஞாயிறு

அடுத்தாண்டு ஜனவரி மாதம் 2-ம் திகதி தொடக்கம் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன.

முதலில் விவசாயிகளுக்கு வழங்கப்படவிருக்கும் இவ்வட்டைகள் நாட்டிலுள்ள சகல மாவட்ட காரியாலயங்கள் பலநோக்கு கூட்டுறவுச்சங்க காரியாலயங்கள் முதலியவற்றில் வைத்து வழங்கப்படவுள்ளன.

நாட்டிலுள்ள 18 வயதுக்கும் மேற்பட்ட யாவருக்கும் அடையாள அட்டைகள் வழங்குவது என முன்னர் முடிவுசெய்யப்பட்டது யாவரும் அறிந்ததே. இந்த அடையாள அட்டைகளைத் தயாரிக்க அரசாங்கத்துக்கு பல லட்சக்கணக்கான ரூபா வேண்டியிருந்தது. அரசாங்கம் இதற்கு ஜெர்மனியின் உதவியை நாடியது. ஜெர்மன் அரசு இவ்வடையாள அட்டைகளைத் தயாரித்து உதவ முன்வந்தது.

ஜெர்மன் உதவியோடு தயாரிக்கப்பட்ட இந்த அடையாள அட்டைகள் விவசாயிகளுக்கு ஜனவரி 2-ம் திகதி தொடக்கம் வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

— —

### தேர்தல்

சென்னை, டிச. 27

தமிழ்நாட்டில் 10 நகரசபைகளின் தேர்தல் நாளை நடைபெறவிருக்கின்றது. 250ஸ்தானங்களில் 850பேர் போட்டியிடுகிறார்கள்

# இந்திய ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டது

# மார்ச் மாதத்துக்கு முன் இடைத்தேர்தல்

## நிலைமையை விளக்கி பிரதமர் இந்திரா செய்தி

புதுடில்லி, டிச. 27

இந்திய ஆட்சிமன்றம் (லோக்சபை) இன்று கலைக்கப்பட்டது. இன்று மாலை நடைபெற்ற மந்திரிசபையின் அவசரக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைத் தொடர்ந்து ஆட்சி மன்றத்தைக் கலைக்கும்படியும் இடைத்தேர்தல் நடத்தும்படியும் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு பிரதம மந்திரி சிபார்சு செய்தார். இச்சிபார்சை ஏற்றுக்கொண்ட குடியரசுத்தலைவர் ஆட்சிமன்றத்தைக் கலைக்கும் பிரகடனத்தை இன்றிரவு வெளியிட்டார்.

*1971ம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் இடைக்காலத் தேர்தல் முடிவடைந்துவிடுமென்று பிரதமர் திருமதி இந்திரா விடுத்த செய்தியில் தெரிவித்தார் குடியரசுத்தலைவரை பிரதமர் சந்தித்தபின் ...ர்க்கட்சித்தலைவர்களும் சந்தித்துப் பேசினர்.*

ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்றிரவு வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு ஒரு செய்தி விடுத்தார். ஆட்சிமன்றத்தின் ஆயுட்காலம் இதுதான் முதல் தடவையென்றும் கூறினார்.

இப்படி இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் ...து செய்தியில் விளக்கினார்.

அடைவதற்கு உள்ள இடையூறுகளை நீக்கிக்கொள்ள வேண்டுமென்றும் இதற்காக மக்களின் அங்கீகாரத்தைப் பெறவே ஆட்சிமன்றத்தைக் கலைத்து இடைத்தேர்தல் நடத்த அரசாங்கம் தீர்

## உடுப்பிட்டி கிராமசபை தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

உடுப்பிட்டிக் கிராமசபைத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. தற்போதைய தலைவர் திரு. ஆர் ஆர். தர்மரத்தினம் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பெற்றார். 408 வாக்குகளால் அவர் வெற்றியீட்டினார்.

1-ம் வட்டாரம்: வல்லி கிருஷ்ணபிள்ளை (போட்டியில்லை)

2-ம் வட்டாரம்: சுந்தையா குலசிங்கம் (போட்டியில்லை)

3-ம் வட்டாரம்: கிட்டிணன் கோபாலன் (போட்டியில்லை)

4-ம் வட்டாரம்: இளையதம்பி தணிகாசலம்(போட்டியில்லை)

...போதைய தலைவர்)

9-ம் வட்டாரம்: வி. சின்னராசா.

10 ம் வட்டாரம்: மயில்வாகனம் துரைசாமி.

11-ம் வட்டாரம்: கே. தளையசிங்கம்.

12-ம் வட்டாரம்: பொன்னையா கணேசு.

13-ம் வட்டாரம்: எஸ். கனகலிங்கம்.

14-ம் வட்டாரம்: எஸ். இரத்தினசாமி.

15-ம் வட்டாரம்: மாணிக்கம் விஜயரத்தினம் போட்டியில்லை)

16-ம் வட்டாரம் ஈ. விருத்தாசலம்.

17-ம் வட்டாரம்: சி. சிவபாதசுந்தரம்.

18-ம் வட்டாரம்: தா. மயில்வாகனம் (போட்டியில்லை)

## "வன்முறையற்ற சமுதாய புரட்சிவர வேண்டும்"

### பௌத்த காங்கிரஸில் தலைமைஉரை

கோட்டை, ஞாயிறு

'எமது நாட்டில் பொது விவகாரங்களில் காணப்படும் நேர்மையின்மை ஒழுக்கக் குறைவு ஆகியன உயரிய பௌத்த தத்துவங்களோடு போட்டிபோட முடியாது.

மாத்தளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அகில இலங்கை பௌத்த காங்கிரசின் 52-வது மகாநாட்டில் உரையாற்றிய அகில இலங்கைபௌத்த காங்கிரஸ் தலைவர் டாக்டர் குணபால மலலசேகரா மேற்கண்ட

**ஒழுக்கத்தின்தரம் குறைகிறது**

பொது அலுவல்களில் நாளாந்தம் நேர்மையின்மையை நாம் காணக் கூடியதாகவிருக்கிறது. நாளாந்த வேலைகளை நேர்மையாகச் செய்யாது தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வதில் நேரம்போகிறது. குற்றச் செயல்கள் இதனால் அதிகரிக்கின்றன. இதுமட்டுமன்றி அதிகாரம் பணபலம்பெற்று முன்னணியில் நிற்பவர்களி

பெயரால் பல மோசடிகள் செய்யப்பட்டுவருகிறது

**வன்செயலுக்கு இடமளிக்கக் கூடாது**

நாட்டின் தற்போதைய சட்டம் வெற்றியளிக்காது என்பது பலவழிகளாலும் அறிய கூடியதாகவிருக்கிறது. மேற்படி தீமைகளை அகற்ற சமுதாயப்புரட்சி ஒன்று அவசியமானதாகும். இச்சமுதாயப் புரட்சியில் வன்முறைகளுக்கு இடமளிக்கக்கூடாது பௌத்தத்தை அடிப்படையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] (போட்டியில்லை)
3-ம் வட்டாரம்: கிட்டினன் கோபாலன் (போட்டியில்லை)
4-ம் வட்டாரம்: இராய தம்பி தணிகாசலம் (போட்டியில்லை)
5-ம் வட்டாரம்: வல்லிபுரம் கதிரித்தம்பி (போட்டியில்லை)
6-ம் வட்டாரம்: தம்பு பரமசாமி.
7-ம் வட்டாரம்: ஆறன் சிசுபாலன் (போட்டியில்லை)
8-ம் வட்டாரம்: ஆர். தர்மரத்தினம் (தற்...

16-ம் வட்டாரம் ஈ. விடுத்தாரசலம்.
17-ம் வட்டாரம்: சி. சிவபாதசுந்தரம்.
18-ம் வட்டாரம்: தா. மயில்வாகனம் (போட்டியில்லை)
19-ம் வட்டாரம்: செம்பர் திருநாவுக்கரசு (போட்டியில்லை)
20-ம் வட்டாரம்: கே. அண்ணாமலை.
21-ம் வட்டாரம்: கே. அப்புக்குட்டி.
22-ம் வட்டாரம்: பி. ஐயாத்துரை.

## உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க யாழ்ப்பாணத்தில் கண்காட்சி

யாழ்ப்பாணம், செவ்
"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மறைந்து, மறக்கப்பட்டுமிருக்கும் பொருளாதார வளங்களை வெளிக்கொணர்ந்து அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி, ஆக்கபூர்வமான செயல்களில் உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துவதற்கு இளம் தமிழர் முன்னேற்ற மன்றம் முன்வந்துள்ளதை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு நேற்று யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த இளம் தமிழர் முன்னேற்றமன்ற ஈழ வளக் கண்காட்சியின் ஆலோசனைக் கூட்டத்தில் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது: இந்தக் கண்காட்சியை சிறப்புற நடாத்துவதற்கு விவசாயக்கழகங்கள், சிராம முன்னேற்றச் சங்கங்கள் எல்லாவற்றுடனும் தொடர்பு கொள்ளவேண்டும்.

இளைஞர்கள் பொருளாதாரத்துறையில் கவனம் செலுத்துவது போற்றத்தக்கது. இக்கண்காட்சி சிறப்படைய எல்லோரும் ஒத்துழைப்பும் தேவை.

மன்ற உபதலைவர் திரு. கு செல்வச்சந்திரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

செயலாளர் திரு தம்பு சிவா ஈழவளக் கண்காட்சி சம்பந்தமாக விரிவான விபரங்களை எடுத்துக்கூறினர்.

இளைஞர்களது வேலையில்லாப் பிரச்சினைக்கு உதவக்கூடிய பயனுள்ள கருத்துக்களை கூறினர்கள்.

ஈழவளக் கண்காட்சியை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 9 திகதி யாழ்ப்பாண நகரில் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் திரு ரி முருகேசம்பிள்ளை தலைமையிலான கண்காட்சி சபையும், தெரிவுசெய்யப்பட்டது. (கு வி ம)

# செயற்கை மூளை
## வியத்தகு கண்டுபிடிப்பு

ஹூஸ்டன், டிச. 27
ஹூஸ்டனிலுள்ள விஞ்ஞானிகள் வியத்தகு கண்டுபிடிப்புஒன்றை மேற்கொண்டுள்ளனர். மூளை, தகவல்களை எப்படிப் பெற்றுக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதை கடந்த 6 ஆண்டு ஆராய்ச்சியைத் தொடர்ந்து இக்கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளனர் இந்த செயற்கை மூளையைக்கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் டாக்டர் ஜோர்ஜ் மிக முக்கியபங்குவகித்தார் இந்த வியத்தகு விஞ்ஞான கண்டுபிடிப்பு மேலும் தொடர்ந்து நடைபெறும்

## கிரி வேண்டுகோள்

புதுடில்லி, டிச, 27
கண்பார்வையழந்தவர்களுக்கு உதவுவது ஒவ்வொருவருடைய தலையாய கடமையெனவும் குறைந்தது 10 பைசாவாவது வழங்கவேண்டும் எனவும் பாரத ஜனாதிபதி திரு வி வி கிரி பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்றிரவு வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு ஒரு செய்தி விடுத்தார், ஆட்சி மன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு முன்னர் அதைக் கலைத்து இடைத்தேர்தல் நடத்துவது ஜனநாயக நாடுகளில் புதிதல்லவென்றும் இது அரசியல் அமைப்புக்கு உட்பட்டதென்றும் இப்படியான சம்பவங்கள் இதர நாடுகளில் நடைபெற்றிருக்கின்றனவென்றும் குறிப்பிட்ட பிரதமர் இந்திரா, சுதந்திர இந்தியாவின் சரித்திரத்தில் இதுதான் முதல் தடவையென்றும் கூறினர்.

இப்படி இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் தமது செய்தியில் விளக்கினார்.

காங்கிரஸில் ஏற்பட்ட பிளவு, மாணவர் கிளர்ச்சி, வன்முறைச் சம்பவங்கள், தொழிலாளர் கிளர்ச்சி, ராஜ மான்ய ஒழிப்பு மசோதாவை ராஜ்யசபை ஒரு வாக்கினால் நிராகரித்தது, குடியரசுத் தலைவர் பிறப்பித் கட்டளையை ரத்துச்செய்து சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு வழங்கியது ஆகிய நிகழ்ச்சிகள் பற்றி பிரதமர் தமது உரையில் குறிப்பிட்டார்.

மதச்சார்பின்மையும் அனைவருக்கும் சமத்துவம் கிடைக்க வேண்டுமென்பதுதான் இந்திய அரசியல் அமைப்பு என்பதை விளக்கிய பிரதமர் இந்த இலட்சியத்தை அடைவதற்கு உள்ள இடையூறுகளை நீக்கிக்கொள்ள வேண்டுமென்றும் இதற்காக மக்களின் அங்கீகாரத்தைப் பெறவே ஆட்சிமன்றத்தைக் கலைத்து இடைத்தேர்தல் நடத்த அரசாங்கம் தீர்மானித்ததாகவும் தெரிவித்தார்

— —

## ஜனவரி முதல் வங்கி வட்டி அதிகரிப்பு

கோட்டை, ஞாயிறு
1971-ம் ஆண்டு ஜனவரி முதல்வங்கிகளின் வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நிலையான வட்டிவீதம் 4 வீதத்திலிருந்து 7வீதமாக அதிகரிக்கும். வங்கிகளில் வைப்புப் பணத்தின் வட்டி நாலரை வீதத்திலிருந்து ஏழரை வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது.

மாணவர்களுக்கு

## சமயசூழல் அவசியம்

— துடாவை

கோட்டை, ஞாயிறு
மாணவர்கள் நல்லொழுக்க முள்ளவர்களாகத் திகழ்ந்து கல்வியில் ஊக்கம் கொள்ளச் சமயச் சூழல் இன்றியமையாதது அத்தியாவசியமானதுமொன்று

பலவில்ல அரசாங்க பாடசாலையொன்றில் புத்தபடிலம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் கல்வி அமைச்சின் உதவியமைச்சர் திரு துடாவை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் மாணவர்களது மனஉறுதிக்கும் ஒழுக்கத்துக்கும் தேவையான சமய சூழல் நிலவ தேவையான இடங்களிலெல்லாம் ஆலயங்கள் நிறுவ வேண்டும் எனக் கூறினர்.

......

## பெற்றோர் கவலை

உடுப்பிட்டி, ஞாயிறு
தமிழ்ப்பகுதிக்குரிய ஒரேயாரு தொழில்நுட்பக் கல்லூரியாகிய யாழ் தொழில் நுட்பக்கல்லூரியில் தொழிற் கல்வி பயின்று பலவருடங்களாகியும் உத்தியோக வசதி பெறுதிருக்கும் மாணவர்கள் பலரின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குப் பெருந்தொகைப் பணம் செலவழித்துப் படிப்பித்தும் பிரயோசனமில்லையே எனக் கவலையடைந்துள்ளனர்.

இம்மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் தமிழ்த்தலைவர்களும், எம்பிக்களும் எவ்வித கவனமும் செலுத்துவதில்லையென்றும் அரசாங்கமும் இம்மாணவர்களின் கல்விக்கெனச் செலவு செய்யும் பலகோடிக்கணக்கான பணமும் வீணாக விரயமாக்கப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது,

# ஹஜ் யாத்திரிகர் கோட்டா முறை புதிதல்ல

— கல்வியமைச்சர்

கோட்டை, ஞாயிறு
'45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் முதல் தடவையாக ஹஜ் யாத்திரை மேற்கொள்பவர்களுக்கும் ஹஜ் யாத்திரீகர்கள் தெரிவில் முதன்மையளிக்கப்படும் கல்வி அமைச்சரும் இலங்கை முஸ்லிம் ஹஜ் யாத்திரைக் குழுவின் தலைவரான அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்,

அமைச்சர் ஹஜ்யாத்திரை குறித்து மேலும் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

தற்போது நாட்டில் அன்னிய செலாவணிப் பிரச்சினை நிலவுகிற வேளையில் அரசாங்கம் முஸ்லிம் யாத்திரிகர்களுக்கு அவர்களுக்கு முன்னைய வருடங்களில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை மக்கள் அரசாங்கம் தளர்த்தியுள்ளது, இதற்கு முஸ்லிம் சமுகத்தவர்கள் அரசாங்கத்துக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். ஹஜ்யாத்திரை மேற்கொள்ள வசதியான ஆவலுள்ளஒவ்வொரு முஸ்லிமுக்கும் யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு தற்போதுள்ள கோட்டா முறையின்படி அனுமதி வழங்கப்படும்.

யாத்திரிகர்களுக்கு தற்போது இலங்கையில் கொண்டுவரப்பட்டுள்ள கோட்டா முறை புதிதல்ல, பாகிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளிலும் இத்தகைய கோட்டாமுறையுள்ளது.

# கிராமப்புற மக்களுக்கு கடன்வழங்கலில் முதலிடம்

— வீடமைப்பு அமைச்சர்

கோட்டை, ஞாயிறு
வீடமைப்பு அமைச்சு வீடு கட்டுவதற்கு மக்களுக்குக் கடன் வழங்கும் பட்சத்தில் கிராமப்புற மக்களுக்கே முதன்மையளிக்கப்படும்என வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர்கெனமன் அறிவித்துள்ளார்.

மாதாந்தம் 500 ரூபாவுக்கும் அதிகமான ஊதியம் பெறுபவர்களுக்குக் கடன் வழங்குவதில்லை எனவும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக வீடமைப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

கிராமப்புறமக்கள் வசதியற்ற வீடுகளில் வசிக்கிறார்கள் எனவும் அவர்களது நிலைமையை யுயர்த்த அவர்களுக்கு வசதியான வீடுகள் தேவை ஆதலாலும் அவர்களது ஊதியமும் குறைவாகவிருப்பதால் கடன் வழங்குவதில் அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டியிருக்கிறது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

தினம் நடைபெற்ற அகில இலங்கை பௌத்த காங்கிரசின் 52-வது மகாநாட்டில் உரையாற்றிய அகில இலங்கைபௌத்த காங்கிரஸ் தலைவர் டாக்டர் குணபால மலலசேகரா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ...செய்யாது தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வதில் நேரம்போகிறது. குற்றச் செயல்கள் இதனால் அதிகரிக்கின்றன. இதுமட்டுமன்றி அதிகாரம் பணபலம்பெற்று முன்னணியில் நிற்பவர்களிடையே ஒழுக்கத்தின் தரம் குறைந்து கொண்டேவருகிறது: மேலும் மதத்தின் ...அகற்ற சமுதாயப்புரட்சி ஒன்று அவசியமானதாகும்: இச்சமுதாயப்புரட்சியில் வன்முறைகளுக்கு இடமளிக்கக்கூடாது பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த வன்முறைகள் ஏற்படாது கவனிக்க வேண்டும்.

இலங்கையின் பெரும்பான்மை மக்களாகிய பௌத்த மக்கள் இங்கு வாழும் மற்றைய மக்களுடன் இன, மத, மொழி பேதமின்றி நட்புறவோடு வாழ்வதே அவர்களது குறிக்கோள். இதற்கு உதாரணமாக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த பரிசுத்த பாப்பரசர் ஆறுவது சின்னப்பருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விளங்குகிறது. இன்று நாம் ஒவ்வொருவரும் பேசிக்கொள்ளும் சோஷலிசமானது பௌத்தமதத்துக்குப் புதிதானதொன்றல்ல புத்தபிரானே இந்த உலகின் முதலாவது பரந்த நோக்குடைய சோஷலிசவாதி என்பதை நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்

மேலும் பௌத்தகமிட்டி பற்றியும், மத்திய பௌத்த சபை நிறுவுவது குறித்தும் டாக்டர் மலலசேகரா குறிப்பிட்டு மக்கள் அரசாங்கம் பௌத்த மதத்தைப் பேணிக்காக்கவும் பௌத்த வளர்ச்சிக்காகவும் உதவ வேண்டும் எனவும் குறிப்பிட்டார்

— —

# 2,500 பேருக்கு விரைவில் ஆசிரிய நியமனம்

கோட்டை, ஞாயிறு
ஜி. சி. ஈ சித்தியடைந்த 2500 பேருக்கு விரைவில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன

இவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டதாகக் கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவ்வாசிரியர்கள்தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களாகவே விளங்குவார்களெனினும் இவர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பளம் வழங்கப்படும் இந்த ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்பட்ட மாவட்டத்தில் 3 ஆண்டுகள் கடமையாற்ற வேண்டும்,

மாவட்ட நியமனத்திட்டத்தின் கீழ் இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# தமிழ் நாட்டில் மாணவ கோஷ்டிகள் கைகலப்பு
## தடியடி, கல் வீச்சில் மாணவர் பொலிசார் காயம்

சென்னை, டிச 27
தமிழ்நாட்டில் நேற்று மூன்று இடங்களில் மாணவர் கோஷ்டிகளுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டது. சில இடங்களில் நிலைமையைச் சமாளிப்பதற்காக பொலிசார் தடியடிப்பிரயோகமும் செய்ய நேரிட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி டால்மியாபுரத்திலிருந்து திருச்சிக்குச் செல்லும் வழியில் மணப்பாறைக்குச் சமீபத்தில் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கும் மாணவர் கோஷ்டியொன்று தமிழக அரசின் போதனா மொழிக் கொள்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தது. இதே சமயம் போதனா மொழிக் கொள்கையை ஆதரித்து தி. மு கழகத்தைச் சார்ந்த மாணவர் கோஷ்டியொன்று ஆர்ப்பாட்டம் செய்தது. இரு கோஷ்டிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டு பெரும் கைகலப்பாக மாறியது. கல்வீச்சும் இடம்பெற்றது. நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு பொலிசார் இலேசாகத் தடியடிப்பிரயோகம் செய்தனர் காயமடைந்த நான்கு மாணவர்களும் கல்வீச்சில் காயமடைந்த மணப்பாறைப் பொலிசைச் சேர்ந்த சில பொலிஸ்காரர்களும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர்,

### எழும்பூரில்

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் வடநாட்டிலிருந்து வந்த மாணவர்களில் இரு கோஷ்டியினருக்கிடையில் எழுந்த வாக்குவாதம் கைகலப்பாக மாறியபோது பொலிசார் தலையிட்டு அமைதியை நிலைநாட்டினர். திருவனந்தபுரத்தில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கொன்றில் கலந்துகொள்வதற்குச் செல்லும் இம் மாணவர்களில் ஒரு பிரிவினர் ஜனசங்கக் கட்சியை ஆதரிப்பவர்களென்றும் மற்றையோர் இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களென்றும் அரசியல் வாக்குவாதமே கைகலப்பாக மாறியதாம்.

### மதுரையில்

மதுரை ரயில் நிலையத்திலும் இரு பிரிவு மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பை பொலிசார்தலையிட்டுச் சமாளித்ததுடன் அந்த ரயில் பொலிஸ் பாதுகாப்புடன் புறப்பட்டுச் செல்ல வேண்டியும் ஏற்பட்டது.

## "இவர்களை அனுப்புங்கள்"

பருத்தித்துறை, ஞாயிறு
"அரசாங்கத்தின் முற்போக்குக் கொள்கைகளுக்கு ஆதரவளிக்காத உயர்தர அரசாங்க ஊழியரைத் தண்டிக்கும் முகமாக அவர்களை வடபகுதிக்கு அனுப்புவதால் இங்குள்ள அரசாங்க எதிர்ப்புச் சக்திகளின்பலம் இங்கு அதிகரிக்கலாம். அரசாங்கத்தின் நற்பெயரை இவர்கள்பழுதாக்குவதுடன், முற்போக்குத் திட்டங்களையும் மறைமுகமாக முறியடிக்க ஒத்துழைக்கலாம் எனவே, அரசாங்கத்தின் பயன்தரு திட்டங்களைத் திரிகரணசுத்தியுடன் நிறைவேற்றும் ஆற்றல் உள்ளவர்களை மட்டுமே வடபகுதிக்கு அனுப்புவது சிறந்தது."

இவ்வித மகஜர் ஒன்றை உடுப்பிட்டிக் கம்யூனிஸ்ட் வாலிபர் கிளை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் மூலம் அனுப்பி வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மெசின் பூ வேலைகள், ஸிமோர்க்கிங் வேலைகள் செய்யக்கூடிய திறமை வாய்ந்த பெண்கள் தேவை. மிஸ் கின்ஸ், 27, பெரியகடை, யாழ்ப்பாணம். 2439

யாழ்ப்பாணப் பகுதியில் சைவக் குடும்பத்தில் வயது வந்த மகளுடன் வாழும் நடுத்தரக் குடும்பத்தைப் பொறுப்பேற்று நடத்த 45க்கும் 50வயதிற்கும் உட்பட்ட கல்வி அறிவுள்ள வெள்ளாள இந்துமதத்தைச் சேர்ந்த எல்லாத் தொல்லைகளிலும் விடுபட்ட செல்வி அல்லது கைம்பெண் தேவை. மேலதிக நேரத்தை தேர்ச்சி பெற்ற கைத்தொழிலில் பயன்படுத்தி மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகள், வைத்தியசாலை அண்மையில். விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 2441, C/o 'ஈழநாடு', த. பெ. இல: 49, யாழ்ப்பாணம். 2441

### தேவை

வைத்திய தம்பதிகள் வசிப்பதற்கு ஏற்ற சகல வசதிகளுமுள்ள வீடு யாழ் ஆஸ்பத்திரிக்கண்மையில் 1-1-71க்கு முன்னர் தேவை விபரங்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி, ஊர்காவற்றுறை. 2437

### விற்பனைக்கு

வட்டுக்கோட்டை கிழக்கில் உள்ள குதிரைப்பிட்டி என்னும் பெயருடைய 14 பரப்பு வயல் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு செல்வி ரி. கணபதிப்பிள்ளை, கண்டி வீதி, சாவகச்சேரி என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 2605

### கி ச கூட்டம்

உடுப்பிட்டி, ஞாயிறு கட்டைவேலிக்கிராமசபையின் இம்மாதக்கூட்டம் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நடைபெற்றது கடந்த மாதக் கூட்டத்தில் அங்கத்தவரொருவர் திடீரெனத் தாக்கப்பட்டதைத் தொடர்ந்தே இப்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா—அசோகன் நடித்த

மாட்டுக்கார வேலன்

மனோஹரா – யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள் போயா 4 காட்சிகள்

என். டி. ராமராவ், கே. ஆர். விஜயா, ராஜ்ஸ்ரீ நடித்த

லக்ஷ்மி கடாட்ஷம்

ராஜா - யாழ். நகர்

தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30

ஏசுநாதர்-தமிழ்

இப்படத்துடன்

அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரை

எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 28—12—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4 25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-10 இசைப்பயிற்சி, 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45 செய்திச்சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித்தொகுப்பு.

......

## வைத்திய அத்தாட்சிப் பத்திரம் இல்லையாம்

உடுப்பிட்டி, ஞாயிறு நெல்லியடிப் பட்டின சபையால் நடாத்தப்படும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் இல்லாததால் இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் அரசாங்க ஊழியர்கள் அதிக கஷ்டமடைந்து வருகின்றனர்.

நெல்லியடிப் பட்டின சபை இவ்விஷயத்தில் கூடிய கவனமெடுத்து இவ்வைத்தியசாலைக்கு அத்தாட்சிப் பத்திரங்களை அனுப்பி வைக்கவேண்டுமென்று பொதுமக்கள் கோரியுள்ளனர்.

## கி. மு. சங்கம் அங்குரார்ப் பணம்

யாழ்ப்பாணம், திங்கள் மாதகல் கிராமமுன்னேற்றச்சங்கத்தின் அங்குரார்ப் பணக்கூட்டம் மாதகல் சென், தோமஸ் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இதில் வலி. மேற்குக் கிராம அபிருத்தி உத்தியோகத்தர் திரு. கே. என். நவரத்தினம் கலந்துகொண்டு பேசினார்.

உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்...



## இடமாற்றம்

கொழும்பு கணபதி வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றிய திரு திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் யாழ் இந்துக்கல்லூரித் தமிழ்ப் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கொழும்பில் முத்துமாரியம்மன் கோயில் கொம்பனித்தெரு சுப்பிரமணிய சுவாமி கோவில் ஆகியவைகளில் கந்தபுராண விரிவுரை மற்றும் கதாப்பிரசங்கங்களும் நிகழ்த்தி வந்தார்.

0 0 0

பருத்தித்துறை, ஞாயிறு திருக்கோணமலை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த திரு வி. தினகரிப்பிள்ளை அடுத்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

தாவடி, ஞாயிறு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் கடமையாற்றிய திரு ரி. சிவபாலசிங்கம் கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கும் திரு எஸ். சிவசாமி கல்முனைக் கிராமக் கோட்டுக்கு பிரதம லிகிதராகவும் திரு ஏ. வென்செஸ்லொஸ் அநுரதபுரிபிஸ்கால் கந்தோருக்கும் ஜனவரிமுதல் இடமாற்றலாகிச் செல்கின்றனர்.

0 0 0

சுன்னாகம் பட்டினசபைக் காரியதரிசியாக ஊர்காவற்றுறைப் பட்டினசபைக் காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு எம். தாமோதரம்பிள்ளை ஜனவரியிலிருந்து பதவி வகிப்பார்.

“மேலை நாடுகளில்

# இலங்கைச் சுருட்டுகளை சந்தைப்படுத்த வகைசெய்க”

மட்டுவில், ஞாயிறு 'வடபகுதியில் தயாராகும் புகையிலைச் சுருட்டுக்களை, தோற்றத்திலும் வடிவிலும் மாற்றம் செய்து வாசனையூட்டி ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பினால் கண்டிப்பாக அந்நாடுகளில் இப்பகுதிச் சுருட்டுகளுக்கு அதிக வரவேற்பிருக்கும் என்பதில் சந்தேகமில்லை எனவே வர்த்தக அமைச்சு இச்சுருட்டுகளை அங்கு சந்தைப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை ஐரோப்பிய நாடுகளுடன் நடத்தி ஒரு வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்வதன் மூலம் அந்நிய செலாவணியைச் சம்பாதிப்பதுடன் இப்பகுதி இளைஞர்களுக்கு வேலைவசதியும் கிடைக்கச் செய்யலாம்.'

இவ்வாறு இலங்கை விவசாய வர்த்தக ஸ்தாபனத் தலைவர் திரு. சதாசிவம் நடராஜா ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார். திரு நடராஜா தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

வடபகுதியில் தலைசிறந்த உற்பத்தியான புகையிலைச் சுருட்டுக்களை மணிலாச் சுருட்டுப்போன்ற வடிவில் உருவாக்கி இங்கு போடப்படும் கோடாவிற்குப் பதிலாக வாசனையை ஊட்டி ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பினால் அங்கு இச்சுருட்டுகளுக்கு நிச்சயம் நல்ல வரவேற்புக்கிடைக்கும்.

எனவே இந்த முயற்சியில் இலங்கை வர்த்தக அமைச்சு அக்கறைகாட்டி ஐரோப்பிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி விரைவில் ஒரு வர்த்தக ஒப்பந்தம் செய்யவேண்டும் அப்படிச் செய்வதன் மூலம் இலங்கை வெளிநாட்டுச் செலாவணியைச் சேகரிப்பதுடன் வடபகுதியிலுள்ள ஆயிரமயிரம் வாலிபர்களுக்கு வேலை கிடைக்கக் கூடிய சந்தர்ப்பத்தையும் உருவாக்க முடியும்'

## ஓய்வுபெறும் ஆசிரியர்கள்

மா. [illegible]

ஒரே பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று ஆசிரி...

...கொண்டாடப்பட்டது, இவர் காலஞ்சென்ற ...சைவப்பெரியார் பண்...

## புதைபொருள் ஆராய்ச்சி கமிட்டிகள்

கோட்டை, ஞாயிறு நாட்டில் தற்போது புதைபொருள் ஆராய்ச்சி வேலைகள் ஒரு முகப்படுத்தப்பட்டு செறிவாக நடைபெற்று வருகின்றன

இந்தப் புதைபொருள் ஆராய்ச்சி வேலைகளைச் செவ்வனே கவனிக்க ஏற்கனவே 5 புதிய புதைபொருள் ஆராய்ச்சி இலாகா குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. பொலநறுவை, கண்டி, அனுராதபுரம், மாத்தளை, தேனுவர ஆகிய இடங்களில் மேற்படி கமிட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளன. இக்கமிட்டிகளை விட புதிய தொல்பொருள் காட்சி நூதனசாலைகளும் நிறுவப்பட்டுள்ளன திருக்கோணமலையில் இத்தகைய தொருநூதனசாலை ஒன்று ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது.

......

## பஜனை ஊர்வலம்

மட்டுவில், ஞாயிறு அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் மீசாலை பக்திநெறிக் கழகத்தின் சார்பில் இளம் சைவப்புலவர் கு. வி. மகாலிங்கம், தலைமையில் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி ஓதும் பஜனை ஊர்வலம் நடைபெறவிருக்கிறது.

பல பாடசாலை மாணவ மாணவிகளும் சேர்ந்து கோஷ்டியாகப் பல கிராமத்துக் கோயில்களுக்கும் நடைபஜனையில் பாடல்களை ஓதிச் செல்வார்கள். அதிகாலை மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயிலைத் தரிசித்துப் பஜனை ஆரம்பமாகும்.

திருவெம்பாவை, திருவாதவூரடிகள் புராண பாராயணம் முதலியன வாசிக்க பயன் சொல்லவும் மேற்படி கழகம் மாணவர்களை தெரிவு செய்ய நால்வர் அடங்கிய குழு ஒன்றை அமைத்துள்ளது.

சமய தீட்சை பெறவும் புராண படனங்களைப் படிக்கவும் மாணவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகளைக் கழகம் மேற்கொண்டுள்ளது.

## மக்கள் கமிட்டி மசோதா தயார்

கோட்டை, ஞாயிறு அடுத்தாண்டுமுதல் நாட்டின் நிர்வாகத்தில் 'மக்கள் கமிட்டிகள்' செயலாற்றவுள்ளன. இத்துடன் நிர்வாகத்தில் புதிய மாற்றங் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் கமிட்டிகளை அமைப்பதற்கான மசோதா தயாராகவுள்ளதாகவும் அது விரைவில் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் உள்நாட்டு உள்ளூராட்சி மன்ற பொதுநிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

——

## சைனிங்ஸ்ரார் நிர்வாகிகள்

முசலி, ஞாயிறு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வங்காலை என்னும் கிராமத்தில் சைனிங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரியப்பட்டுள்ளனர்.

போஷகர்: திரு ரே. வால்டர் குருஸ், தலைவர் திரு சி. வி.ரர் முருய்ஸ், காரியதரிசி திரு அ. அருளப்புவாஸ், தனாதிகாரி திரு அ. செபமாலைமார்க்.

5பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## வர்த்தக கைத்தொழில் சபை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள் வட இலங்கை வர்த்தக கைத்தொழில்சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பாம்கோவ் ஹோட்டலில் நடைபெற்றபொழுது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா (மைற் ஸ்தாபனம்), உபதலைவர்கள் ஆர். அரசரத்தினம் (அரஸ்கா கைத்தொழில் நிறுவனம்), எம். பூபாலசிங்கம் ஸ்டீல்சன்ஸ்), காரியதரிசி: ஈ. ஆர். ஜாசேப் (இலங்கை மேர்ஜ்சன்ஸ் லிமிட்), உதவிக்காரியதரிசி: எஸ். பி வேலாயுதபிள்ளை (இராமகிருஷ்ணஸ்),

பின்வருவோர் நிர்வாக சபை அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். திருவாளர்கள்: பி மாணிக்கவாசகர் (வட இலங்கை ரேடிங் கோ லிமிட்), எஸ் புஸ்பநாதன் (சமுத்திரா ரேடஸ் லிமிட்), எஸ் வி. முருகேசு, வி இராஜசேகரம் (சேகரம் அன் சன்ஸ்). எம் முத்துராஜா (ராஜ்கோபால்ஸ்), எஸ் நவரத்தினம் சின்னத்துரை அன் பிரதர்ஸ்), ஆர் ராஜலிங்கம் (யாழ் மெட்டல் இன்டஸ்றீஸ்). பி வைரவநாதன் (முருகன் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்). கே கனகராஜா (மில்க்வைற் சோப்) வி சண்முகலிங்கம் நோர்தன் இன்டஸ்றீஸ்) சேவியர் (சேவி கிளாஸ் வேர்க்ஸ்) ஜி தோமஸ் ஏரோ எலக்றிக்கல்ஸ்)


வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

புதுவருட பண்டிகையை

முன்னிட்டு

விசேஷமாக வரவழைக்கப்பட்ட

* அப்பலோ டெட்ரோன் சேட்

* ஜெருக் அன் ரேல் சேட்

* கெப்ஸ்டன்ஸ் சேட்

* டயா எஸ்டர் சேட்

* வெலெக்ஸ் செக் சேட்

மற்றும்

அநேக வகையான ஜவுளி வகைகளும் மிகமிக மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

டயரூம்ஸ்

54 - 60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரை

எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்

அத்துடன்

பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில் 40 நிமிடங்கள் வரை காண்பிக்கப்படும்.



யாழ். வின்ஸர் திரையில் தினசரி 4 காட்சிகள்

ராஜன், லட்சுமி, நிர்மலா, ரவிச்சந்திரன் நடித்த

# ஏன்?

அத்துடன்

## பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பரின் இலங்கை விஜயம்

30 நிமிடங்களுக்கு தமிழில் எல்லாக் காட்சிகளிலும் காண்பிக்கப்படுகின்றது



கெப்பிட்டல் பிளாஸா

திரைகளிலும்

## யாழ். வெலிங்டன்

திரையிலும்

தினசரி பி.ப. 2-30, மாலை 6-30

இரவு 9-30, போயா நாட்கள்

காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஜெயலலிதா வாணிஸ்ரீ





முத்துராமன், அசோகன், சோ, ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த

சத்யா மூவிஸ்

# கண்ணன் என் காதலன்

அத்துடன்

வெலிங்டனில் பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில் காண்பிக்கப்படும்


நிலையத்தில் நடைபெற்றது. இதில் வலி. மேற்குக் கிராம அபிருத்தி உத்தியோகத்தர் திரு. கே. என். நவரத்தினம் கலந்துகொண்டு பேசினார்.

உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ச பா யோசெவ், உபதலைவர்: திரு எவ் எக்ஸ் விக்ரர் சந்திரசேகரா, செயலாளர்: திரு செ அ சேம்பர்லெயின், உபசெயலாளர்: திரு நீ ஞேச் மரியதாஸ், தனாதிகாரி: அ லூயிஸ். நிர்வாக சபை உறுப்பினர்கள்: திருவாளர்கள்: இ ஆசைப்பிள்ளை, கி ம நீற்ரர், இ பெனடிக்ற், தி செபஸ்தியாம்பிள்ளை, அ மத்தியாஸ், ப லோ இ ஆனந்தராசா,

......

## நாடகப்போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

சித்தன்கேணிசிவச்செல்வி கலாமன்றம் நடாத்தும் யாழ். மாவட்ட நாடகப் போட்டிக்கான இடைத் தெரிவு யாழ். ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரிமண்டபத்தில் இன்று நடைபெறுகிறது. போட்டியில் காலை 4 நாடங்களும் மாலை 5 நாடகங்களும் பங்குபற்றுகின்றன. இன்று பங்குபற்றும் 9 நாடகங்களின் விபரம் வருமாறு:- நல்ல முடிவு, கலையும் கண்ணீரும், பாசத்தின் முடிவு, நல்லதீர்ப்பு, கொந்தளிக்கும் உள்ளம், நன்றிக்கடன், இறுதிப்பரிசு, வெடி அரசன், எதிர்பாராத முடிவு.


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி 2-30, 6-30, 9-30

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த

### நம் நாடு



## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா நாட்கள் 2-30

கே. பி. சுந்தராம்பாள் நடித்த

### ஔவையார்



REGAL

Jaffna

Daily 4-45, 7 9-45 p. m.

Poya days 4 shows

Frank Sinatra

in

THE DETECTIVE


# ஆசிரியர்கள்

### மா. குமாரசுவாமி

ஒரே பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று ஆசிரியராகி, பிரதம ஆசிரியராகி தலைமை ஆசிரியராகி 32வருடங்கள்பணிபுரிந்த சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் திருவாளர் மா. குமாரசுவாமி இம் மாதத்திலிருந்து ஓய்வு பெறுகிறார்.

சைவத்துக்காகவும் தமிழுக்காகவும் உழைத்துவரும் இவர் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தில் வெள்ளிக்கிழமைதோறும் கதாப்பிரசங்கம் சொற்பொழிவு என்பன நடாத்தி வந்துள்ளார்.

அன்னாரது சேவையைப் பாராட்டுமுகமாக சென்ற வருடம் மாவை ஆதீனம் இவருக்கு செஞ்சொற் புலவர் என்ற பட்டமும் கொடுத்து பொற்கிழி வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தது. இவர்பாடல்கள் இயற்றுவதில் திறமை வாய்ந்தவர். சென்ற வருடம் பாடசாலையில் 60 வது ஆண்டு விழா இவரது தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவர் காலஞ்சென்ற [...]ணாகம் சைவப்பெரியார் பண்டிதர் குரு சி. மாணிக்கத்தியாகராசாவின் புதல்வராவார்.

0 0

### ஏ. சிவசாமி

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் வல்வை சிதம்பராக் கல்லூரி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளிற் கடமையாற்றிய திரு ஏ. சிவசாமி இம் மாத இறுதியில் ஓய்வு பெறுகிறார். இவரது சேவையைப் பாராட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஒரு விழா எடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

0 0 0

### இசைப்புலவர் என். சண்முகரத்தினம்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இசையாசிரியராகக் கடமையாற்றி வந்த இசைப்புலவர் என். சண்முகரத்தினம் இவ்வாண்டுடன் இளைப்பாறுகின்றார்.

## 71-ல் நடைபெறவிருக்கும் அ.இ. பாடசாலைப்போட்டிகள்

அம்பன், சனி

1971ம் ஆண்டு அகில இலங்கைப் பாடசாலைப்போட்டிகள் நடைபெறும் முக்கிய திகதிகள் வருமாறு:

பெப்ரவரி 8ம் திகதி தொடக்கம் பங்குனி 25ம் திகதிவரை இலங்கைப் பயிலும் சிறப்பணி பட்டாளப் பாசறை கனிட்ட பட்டாளப் பாசறை பெப். 22ல் சாரணச் சிறுவர் இயக்க ஸ்தாபகர் தினமும் சாரணச் சிறுமிகள் சர்வதேச நினைவு தினமும், பெப். 10ல் அகில இலங்கை சுகாதார உடற் கல்வித் தினம், ஏப்ரல் 21 தொடக்கம் 26 வரை அகில இலங்கை சாரணச் சிறுமிகள் பாசறை, ஜூலை 20 தொடக்கம் 21 வரை அகில இலங்கை நாட்டுப் பாடல், சங்கீத நடன இளைஞர் விழா. ஜூலை 28 தொடக்கம் 29 வரை அகில இலங்கை கனிஷ்ட வித்தியாலயங்களின் விளையாட்டுப் போட்டியும் அகிலஇலங்கை மத்திய மகாவித்தியாலயங்களின் விளையாட்டுப் போட்டியும்.

ஆகஸ்ட் 1-ம் தொடக்கம் 30 வரை இலங்கைப் பயிலும் சிறப்பணி பாசறை சிரேட்டபட்டாளப்பாசறை செப்டெம்பர் 13 தொடக்கம் 17 வரை அகில இலங்கை வித்தியாலயங்களின் வலைப்பந்தாட்ட கரபந்தாட்டப் போட்டிகள். செப்டெம்பர் 23 தொடக்கம் 30 வரை தேசிய சாரணர் வாரம்.

அக்டோபர் 16 தொடக்கம் 17 வரை அகில இலங்கைப் பாடசாலைகளின் 'எல்ல' விளையாட்டுப் போட்டி அக்டோபர் 19 தொடக்கம் 25 வரை பாடசாலைச் சங்கீத நடனவிழா அக்டோபர் 31 தொடக்கம் நவம்பர் முதல் திகதிவரை அகில இலங்கை மல்யுத்தப் போட்டி

......

## தீவுப்பகுதியில் 33 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறை தொகுதியில் அண்மையில் 33 பேர் பட்டதாரி பயிற்சித் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சின் நிரந்தரச்செயலாளர், இத்தகவலை தீவுப்பகுதி எம். பி திரு. கா. பொ. இரத்தினத்திற்கு அறிவித்துள்ளார்.

தெரிவு செய்ய நால்வர் அடங்கிய குழு ஒன்றை அமைத்துள்ளது.

சமய தீட்சை பெறவும் புராண படனங்களைப் படிக்கவும் மாணவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகளைக் கழகம் மேற்கொண்டுள்ளது.


# டயருமஸ்

54 - 60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.



# காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
- ★ ஓய்வெடுங்கள்
- ★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
- ★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
- ★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனால்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள்.

**தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.**

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

R0447

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இடைக்காலத் தேர்தலுக்கு இந்திய அரசியல் கட்சிகள் தயாராகின்றன

புதுடில்லி, டிச 27

இந்தியாவில் ஆட்சிமன்றத்துக்கான இடைத்தேர்தல் விரைவில் நடைபெறுமென்றும் இதற்கான அறிவித்தல் இன்னும் இரண்டொரு தினங்களில் வெளிவரலாமென்றும் குஜராத் மாநில புதுக்காங்கிரஸ் தலைவர் தெரிவித்துள்ளார்.

'நாட்டின் முன்னேற்றத்துக்குப் புதிய பாதை வகுப்பதற்கு அரசியல் அமைப்பைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆட்சிமன்றத்தில் ஆளும்கட்சிக்கு மிகப் பெரும்பான்மைப் பலமில்லாமல் இதைச் செய்ய முடியாது. எனவே இடைக்காலத் தேர்தல் அவசியமாகிவிட்டது' என்று அவர் சொன்னார்.

தமது கட்சி சம்யுக்த சோஷலிஸ்ட், பிரஜாசோஷலிஸ்ட் மற்றும் முற்போக்குக் கொள்கைகளையுடைய கட்சிகளுடன் கூட்டுச்சேருமென்றும் அவர் தெரிவித்தார். குஜராத்தில் உள்ள 24 லோகசபைத் தொகுதிகளிலும் காங்கிரஸ் இடைத் தேர்தலில் போட்டியிடுமென்று அவர் கூறினார்.

இதேசமயம் இடைக்காலத் தேர்தல் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகளும் தங்களுக்குள்ளே சாதக பாதக நிலைமைகளை ஆராயத் தொடங்கியுள்ளன.

கேரளத்தில் புதிய காங்கிரஸின் காரியக் குழுக்கூட்டம் விரைவில் நடைபெறவிருக்கிறது. இடைத் தேர்தலில் தங்கள் கட்சியின் வெற்றிவாய்ப்புக்களை அது ஆராயும் என்று அதன் தலைவர் திரு. கே. கே. விஸ்வநாதன் கூறினார்.

இடைக்காலத் தேர்தலுக்காக ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டால் இடைக்கால அரசுப் பொறுப்பை சிறுபான்மையினரான இன்றைய ஆளும் கட்சியிடத்தில் விடக்கூடாதென்று நிஜலிங்கப்பா காங்கிரஸ் குடியரசுத் தலைவரை கேட்டிருக்கிறது.

## இடைத்தேர்தலுக்கு தி. மு. கழகம் தயார்

'ஆட்சிமன்றத்தைக் கலைத்து இடைக்காலத்தேர்தல் ஒன்று வருமானால் அதனை எதிர்நோக்குவதற்கு திராவிடமுன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது. என தி. மு. க. தலைவரும் தமிழ்நாடு முதன்மந்திரியுமான திரு. மு. கருணாநிதி திருச்சியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

மாநகராட்சித் தேர்தலில் ஏழு கட்சிக் கூட்டணி ஏற்பாடு இடைத்தேர்தலிலும் தொடர்ந்து பின்பற்றப்படும் என்றும் திரு. கருணாநிதி சொன்னார்.

### சுதந்திரா வரவேற்பு

தேசியக்கட்சித்திலும் மாநிலக் கட்சித்திலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வானொலியில் தங்கள் கொள்கைகளை விளக்குவதற்கு வாய்ப்பளிப்பதென்ற பிரதமதேர்தல் கமிஷனரின் தீர்மானத்தை சுதந்திராக்கட்சி வரவேற்றிருப்பதாகத் தெரிகிறது.

## "பெண்களையும் குருமாரையும் மதிப்பதை தேசவழமையாக்குக"

### இ. போ. ச. கண்டக்டர்களுக்கு ஜெயக்கொடி எம். பி. கோரிக்கை

மட்டுவில், ஞாயிறு

"தென் இலங்கையில் உள்ள இ. போ. ச. பஸ் கண்டக்டர்கள் தமது மத்தியிலுள்ள மத குருமாரைக் ... டக்டர்கள் மத்தியில் இதுவரை வளர்ந்து வந்திருப்பதாகத் தெரியவில்லை எனவே இனிமேலாவது எமது மத்தியிலுள்ள இளம் இ. போ. ச. [illegible]

## ஏழாம் வகுப்பு மாணவர் நிலை புதிய பிரச்னை எழுந்துள்ளது

பருத்தித்துறை, ஞாயிறு

நாட்டின் பல பாகங்களிலும் 7-ம் தரமாணவரின் பிரச்சினை ஒரு பொதுப்பிரச்னையாகத் தலைதூக்கியுள்ளது. அண்மையில் கல்விப் பகுதி அனுப்பிய சுற்று நிருபத்தின்படி மகாவித்தியாலயங்களிலும் மத்திய மகாவித்தியாலயங்களிலும் 8-ம் வகுப்பு வைக்கமுடியாதெனக் கூறப்பட்டது. அதையடுத்துச் சில பகுதிகளில் இரு பாடசாலைகள் ஒன்றாக இணைக்கப்பட்டு 8-ம் தரம் கனிஷ்ட பகுதியில் வைக்க அனுமதிக்கப்பட்டது. 7-ம் வகுப்புமட்டுமுள்ள பாடசாலைகளிலிருந்து நூற்றுக்கணக்கான மாணவர் இணைக்கப்பட்ட பாடசாலைகள் நடாத்திய புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றினர். சிலர் அனுமதி பெற்றனர் பலர் அனுமதி பெறத்தவறினர். ஆனால் பாடசாலைப் புகுமுகப் பரீட்சையில் தவறியவர்கள் அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட 7-ம் வகுப்புப் பரீட்சையில் தேறினால் அவர்கள் எங்கே தொடர்ந்து பயிலமுடியுமென்பது தெரியவில்லை இவர்களுக்கான ஒரு மேலதிக வகுப்புவைக்கவேண்டுமாயின் கல்வி அமைச்சு விசேட அனுமதி வழங்க வேண்டுமாம். இப்பிரச்னை புதிய தலையிடியை ஏற்படுத்தியுள்ளது

### நூலாசிரியர் விவரநூல் வெளியிடப்படும்

கோட்டை, ஞாயிறு

இலங்கை சுதந்திர தினமான பெப்ரவரி 4-ந் திகதி இலங்கைத் தமிழாராய்ச்சி மன்றம் நடத்தவிருக்கும் தமிழ்ப்புத்தகக் கண்காட்சியில் 47-ம் ஆண்டிலிருந்து 70 வரை வெளிவந்த நூல்களின் ஆசிரியர்களின் விவரங்களடங்கிய நூலொன்றும் வெளியிடப்படவிருக்கின்றது.

நூற்காட்சியில் இடம் பெறவிருக்கும் நூல்களைச் சேகரிக்கும் பொறுப்பினை அனைத்துலகத் தமிழ் இளைஞர் பேரவையின் இலங்கைக்கிளை ஏற்றுள்ளதாக அதன் அமைப்புச் செயலாளர் திரு. க. நவசோதி தெரிவித்துள்ளார்.

எழுத்தாளர், ஆராய்ச்சியாளர், வெளியீட்டாளர் பற்றி வெளியிடப்படும் நூலில் இடம்பெறவேண்டிய விவரங்களைக் குறிக்க வேண்டிய படிவமும் நூல்கள் அனுப்புபவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென இலங்கை தமிழ் இளைஞர் பேரவை குறிப்பிட்டுள்ளது.

இதுகாலவரையும் நூல்களினதும் சஞ்சிகைகளினதும் இருபிரதிகளை அனுப்பி வைக்காதவர்களை பின்வருவோரிடம் இம்மாத இறுதிக்குள் ஒப்படைக்குமாறு இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு: வித்துவான் எவ் எக்ஸ். சி. நடராசா. யாழ்ப்பாணம்; க' குணராஜா (செங்கை ஆழியான்) யாழ் இலக்கிய வட்டம், கரவெட்டி: பண்டிதர் க. வீரகத்தி, ஹட்டன்: [illegible]

### லிபியாவில் அல்ஜீரிய அதிபர்

திரிப்பொலி, டிச. 27

லிபியாவுக்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்த அல்ஜீரிய அதிபர் ஜெனரல் பூமிதியானுக்கு மிக உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது.

### எம். பி. சிபார்சு

நல்லூர், ஞாயிறு

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், சலுசலா ஆகியவற்றிக்கு உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்களாக திருவாளர்கள் எம். பரமலிங்கம், கே. சின்னத்துரை, வி. எஸ் ஐயாத்துரை, ஆர். [illegible]ரத்தினம், ஏ. ஆர். மனுவேற்பிள்ளை. டாக்டர் ஆர் கனகலிங்கம், திரு. ஏ. காராளசிங்கம் ஆகியோரை கோப்பாய் எம். பி. [illegible] கதிரவேலுப்பிள்ளை வர்த்தக [illegible]

### மறைந்துகிடந்த பொக்கிஷம்

ரியாசானுக்கருகே அண்மையில் ஒரு டிராக்டர் ஓட்டி 12வது 13வது நூற்றாண்டைச் சேர்ந்த வெள்ளி நகைப் பொக்கிஷமொன்றைக் கண்டுபிடித்தார். அவ்விடத்தில் மேலும் புதைபொருள் ஆராய்ச்சி நடத்தியபோது வெள்ளிப் பாத்திரங்களும், நான்கு வெள்ளிக் கட்டிகளும், அரிய கற்கள் பதிக்கப்பட்டுள்ள வெள்ளியினாலான சிலுவைகளும், நெக்கலசுகளும், தலையணிகளும் கிடைத்தன. கடந்த 50 ஆண்டுகளில் நடத்தப்பட்ட புதைபொருளாய்வுகளில் ஸ்லாவ்பொருள்கள் இத்துணை அதிக அளவில் கிடைப்பது இதுவே முதன்முறையாகும்.

### மைசூர் முதல்வர் ஆட்சேபம்

பங்களூர், டிச 27

மைசூர் ராஜ்யத்தின் சட்டம் ஒழுங்குமுறைகளில் இராணுவ அதிகாரிகள் சட்டவிரோதமான முறையில் தலையிடுவதாக மைசூர் முதன்மந்திரி திரு. வீரேந்திரபட்டீல் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கும் பாதுகாப்புமந்திரிக்கும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.

ஒரு ராஜ்யம் வேண்டுகோள் விடுத்ததாலன்றி அந்த ராஜ்யத்தில் அந்த ராஜ்ய அரசின் ஆலோசனையைப்பெற்றுக்கொள்ளாமல் இராணுவ அதிகாரிகள் தம் இஷ்டப்படி நடந்துகொள்ள முடியாது என்று முதன்மந்திரி கூறினார்.

இராணுவ நடவடிக்கை எதற்கும் மைசூரில் அவசியம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லையென்றும் சட்டமும் ஒழுங்கும் அங்கு மீறப்பட்டுவிடவில்லையென்றும் அவர் சொன்னார்.

### மா ஓ வின் பிறந்ததினம்

கொங்கொங், டிச.26

கம்யூனிஸ்ட் சீனாவின் தலைவர் மா ஓ-விற்கு இன்று 75 வயதாகிறது இவருக்கு 75 வயதாகிறதாகச் சொல்லப்பட்டாலும் உத்தியோக ரீதியான அறிவித்தல் எதுவும் வெளியிடப்படவில்லை ஆனால் மங்கோலியாவில் தலைவர் மா-ஓ செய்த அருஞ்செயல்கள் அடங்கியவரலாறுகளை சீனப் பத்திரிகைகள் [illegible] கொடுத்துப் பிரசுரித்தன. மா-ஓ பிறந்த [illegible]

# யூத இளைஞர்கள் தண்டனைக்கு பல நாடுகளில் யூதர் ஆட்சேபம்

டெல்அவிவ், டிச 27

சோவியத் விமானத்தைக் கடத்திச்செல்ல முயன்றதாகக் குற்றஞ்சாட்டி லெனின் கிராட் விசாரணையின்பின் மரணதண்டனை விதிக்கப்பட்ட இரண்டு யூத இளைஞர்களின் உயிரைக் காப்பாற்றி நீதி கிடைக்கச் செய்யும்படி உலக நாடுகளின் தலைவர்களுக்கும் மதத்தலைவர்களுக்கும் மதச்சார்பற்ற தலைவர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கும் தீர்மானம் இஸ்ரேல் ஆட்சிமன்றத்தின் விசேஷ கூட்டத்தில் நிறைவேறியது.

ஆட்சிமன்றம் கூடியதும் பிரதமர் திருமதி கோல்டா மெயர் பேசினார். லெனின் கிராட் விசாரணையையும் தீர்ப்பையும்பற்றி அவர் கவலையுடன் குறிப்பிட்டார். 'நீதி கிடைக்கச் செய்ய வேண்டும்' என்று அவர் கூறினார். ஆட்சிமன்றத்தில் பிரதமர் மட்டும்தான் பேசினார். சோவியத் ரஷ்யாவிலுள்ள யூதர்களை இஸ்ரேலுக்கு வந்துசேர்ந்துவிடும் படியும் திருமதி மெயர் தமது பேச்சில் கேட்டுக் கொண்டார்.

இதேசமயம் உலகின் பல நாடுகளிலுமுள்ள யூதர்கள் அந்தந்த நாடுகளின் தலைநகரங்களிலுள்ள சோவியத் தூதரங்களின் முன்பாக லெனின்கிராட் தீர்ப்பைக் கண்டித்தும் மரணதண்டனையை ரத்துச்செய்யவும் கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர்.

சோவியத் யூத இளைஞர் இருவருக்கும் விதிக்கப்பட்ட மரணதண்டனையை நிறைவேற்றாமல் தடுத்து வைப்பதற்கு ஐ. நா. தலைமைக் காரியதரிசியின் உதவியை இஸ்ரேல் நாடலாமென்று தெரிகிறது.

## பௌத்தமக்களுக்கு ஆர்: ஜியின் கடைசிச்செய்தி

கோட்டை, ஞாயிறு

'அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் 52-வது மகாநாட்டில் கலந்துகொள்ள எனக்குமிகுந்த ஆவல் உண்டு ஆனால் மகாநாட்டில் கலந்துகொள்ள இயலாதவாறு என்னை நோய்தடுக்கிறது.'

காலஞ்சென்ற ஆர். ஜி. சேனநாயக்கா தான் மரணமாவதற்கு சிலதினங்களுக்கு முன்னர் தற்போது 52-வது வருடத்தை நடாத்திக்கொண்டிருக்கும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸிற்கு அனுப்பியுள்ள ஆசிச்செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். அவரது இந்தக்கடிதத்தை மகாநாட்டில் வாசிக்கும் பொழுது மகாநாட்டிலுள்ளவர்கள் யாவரும் மிகுந்த வருத்தத்துடன் காணப்பட்டார்கள்.

அவரதுகடிதத்தில் மேலும் குறிக்கப்பட்டுள்ளதாவது:- பௌத்தமதத்தை வளர்ப்பதும் அதைப்பிரசாரம் செய்வதும் சிங்கள பௌத்தர்களின் கையிலேயேயுள்ளது. பௌத்தத்தின் கடந்தகாலப் புகழிலும் பார்க்க வருங்காலப்புகழ் மேலும் உயர்வுடையதாய் இருக்க வேண்டும்.

சிங்கள பௌத்தர்களுக்கு இச்சிறு தீவைவிட உலகில் வேறோரு இடமுமில்லை. சிங்கள பௌத்த இளைஞர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்தேனும் சிங்களமொழியையும் கலாச்சாரத்தையும் பௌத்தத்தையும் காப்பாற்ற வேண்டும். சிங்கள இனமும், பௌத்தமும் [illegible]

## துருக்கி பிரதமரை கொல்ல முயற்சி

இஸ்தான்புல், டிச 27

துருக்கிப் பிரதமர் மயிரிழையில் உயிர் தப்பினார். இஸ்தான் புலலில் அவர் தமது காரில் சென்றுகொண்டிருக்கையில் கார்மீது பெட்ரோல் குண்டு ஒன்று வீசப்பட்டது. கார் சிறிது சேதமடைந்ததாயினும் விரைவாக அது சென்றுவிட்டது.

ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களே பிரதமரது கார்மீது பெற்றோல் குண்டுகளை வீசினார்களெனப் பொலிசார் தெரிவித்தனர்.

## நியமனம்

சங்கானை ஞாயிறு

ஓமந்தை மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக திரு. மு. சிவானந்தம் அடுத்தாண்டு ஜனவரி முதல் நியமனம் பெற்றுள்ளார்.

எம். ஏ. பட்டதாரியான இவர் கல்வி டிப்புளோமாப் பரீட்சையில் சிறப்பாகத் தேறியவர் யாழ். கவின் கலைக்கழகச் செயலாளரான இவர் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். இரண்டாந்தர அதிபராக அண்மையில் பதவி உயர்வு பெற்ற இவர் சீனு தாய்லாந்து கொங்கொங் இந் [illegible]

## இசைவிழா நிகழ்ச்சிகள்

சென்னை, டிசம்பர் 28

தமிழ்நாட்டில் நடைபெறும் இசைவிழாவில் இன்றைய நிகழ்ச்சிகள்:

மியூசிக் அக்கடமி சார்பில் அக்கடமி மண்டபத்தில்:- பிற்பகல் 1 30: கல்பகம் பாலசுப்பிரமணியம்-பாட்டு. சி ஜீ குமரேசன்-வயலின், என் எஸ் ராஜம்-மிருதங்கம், பிற்பகல் 8 00: எஸ் பாலசுப்பிரமணியம்-பாட்டு. ரி வி ரமணி- வயலின், பி ஸ்ரீநிவாசன்- மிருதங்கம், பிற்பகல் 5 30: மதுரை சோமசுந்தரம்-பாட்டு, கந்ததேவி அழகிரிசாமி-வயலின், சி. எஸ் முருகபூபதி-மிருதங்கம், சியாம் சுந்தர்-கஞ்சிரா, இரவு 8 30 என் ரமணி- புல்லாங்குழல், ரி என் கிருஷ்ணன்-வயலின், காரைக்குடி ஆர் மணி- மிருதங்கம்.

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தின் கீழ் வா. வி மகாலில்:

பிற்பகல் 3 30: லக்ஷ்மி ராஜு-சிதார், வீ குருமூர்த்தி-மிருதங்கம், இரவு 6 00: சிட்டிபாபு-வீணை, குருவாயூர் துரை-மிருதங்கம், கே. எஸ் மஞ்சுநாதன்- கடம், இரவு 9 30: ஹைதராபாத்தைச்சேர்ந்த மாஸ்டர் கார்திக் சேஷாத்ரி- சிதார், சேயிக்டவூட்- தப்லா

தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவின்கீழ் ராஜா அண்ணமலை மன்றத்தில்.

இரவு 6-00 எம் எல். வசந்தகுமாரி-பாட்டு, ரி. சுப்பிரமணியம் - வயலின் தஞ்சாவூர் கிருஷ்ணமூர்த்திராவ்-மிருதங்கம், நாகராஜராவ்-கஞ்சிரா, மன்னார்குடி ராஜகோபால்- மோர்சிங்

இரவு 9-30 தமிழ் இசைக் கல்லூரி மாணவர்கள்-பாட்டு. (இமை-நிரு)

## 'தனி கி. சே. பிரிவாக்கவும்

நல்லூர், ஞாயிறு

சிறுப்பிட்டியிலிருந்து அச்செழுவை மீண்டும் தனிக் கிராமசேவையாளர் பிரிவாகவும், கோப்பாய் தெற்கிலிருந்து இருபாலையை மீண்டும் தனிக்கிராமசேவையாளர் பிரிவாகவும், பத்தமேனியிலிருந்து வளலாய் இடைக்காட்டைப் பிரித்து தனிக் கிராமசேவையாளர் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இ. போ. ச. கண்டக்டர்களுக்கு ஜெயக்கொடி எம். பி. கோரிக்கை

மட்டுவில், ஞாயிறு

"தென் இலங்கையில் உள்ள இ. போ. ச. பஸ் கண்டக்டர்கள் தமது மத்தியிலுள்ள மத குருமாரைக் கௌரவித்து அவர்களை கியூவில் நிற்கவிடாது பஸ்ஸில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமரச் செய்து தமது மதகுருமாரையும் மதத்தையும் கௌரவித்துக் கொள்வதுடன், அதை ஒரு தேச வழமையாகக் கொண்டுள்ளனர். இந்த முறையைப் பின்பற்றி வட இலங்கையில் உள்ள இ போ ச. கண்டக்டர்கள் தமது மத்தியிலுள்ள. இந்து மதகுமாரையும், தாய்க்குலத்தையும் ஏன் கௌரவித்து அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் இடம் கொடுத்து. அதை எமது நாட்டின் தேசவழமையாகிக் கொள்ளக்கூடாது?''

இவ்வாறு கோரி உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. க. ஜெயக்கொடி வடபகுதியிலுள்ள சகல பஸ் டிப்போ முகாமையாளர்களுக்கும் வடபகுதி இ போ. ச. பஸ் காப்பாளர் சங்கங்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார். திரு. ஜெயக்கொடி எம். பி தொடர்ந்து தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

எமது மத்தியில் உள்ள இந்துமத குருமாரைக்கௌரவிக்கும் பழக்கம் தமது வடபகுதி இ. போ. ச. பஸ் கண்டக்டர்கள் மத்தியில் இது வரை வளர்ந்து வந்திருப்பதாகத் தெரியவில்லை எனவே இனிமேலாவது எமது மத்தியிலுள்ள இளம் இ. போ. ச. கண்டக்டர்மார் எமதுமத்தியிலுள்ள இந்து மத குருமாரையோ அல்லது வேறெந்த மத குருமாரையோ மதிக்கும் பழக்கத்தை வளர்த்து எமது மத்தியிலுள்ள தாய்க்குலத்தையும் மதித்து அவர்களுக்கென விசேஷ ஆசனங்கள் ஒதுக்கிக்கொடுக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி, இதன் மூலம் எமது மதத்தையும், மதகுருமாரையும், தாயக்குலத்தையும் கௌரவிக்கும் பண்பை உயர்த்த வேண்டும் இதற்கு இன்றைய இளம் இ. போ. ச பஸ் கண்டக்டர்கள் முன்னின்று உழைத்து இதனை ஒரு தேசவழமையாக்கி முன்மாதிரி காட்டவேண்டும்?''

## தாய்லாந்தில் பிக்பாக்கட் இல்லை

கோட்டை, ஞாயிறு

எமது நாட்டு மக்கள் யாவரும் தாய்லாந்து மக்கள் போன்று தொழில் விருப்புடையவர்களாக இருந்தார்களானல் நாட்டில் 'பிக்பாக்கட்டே' இருக்காது.

சமீபத்தில் பாங்கொக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிவிட்டு நாடுதிரும்பிய 'பிக்பாக்கட் ஒழிப்புக்குழு பொறுப்பதிகாரி உதவி இன்ஸ்பெக்டர் திரு. பி.எல். கருணசேன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தாய்லாந்து பற்றி மேலும் குறிப்பிட்டதாவது:

இலங்கையில் பெருமளவில் காணப்படும் இந்த 'பிக்பாக்கட்' களவை தாய்லாந்தில் காதால்கூட கேட்க முடியாது உலகத்திலேயே தாய்லாந்து பொலிஸ்படை நன்ருக அமைக்கப்பட்ட மதிக்கப்படுகிற பொலிஸ் படைகளில் ஒன்ருகும்.

## நாகபூஷணியை உடனே அனுப்புக

யாழ்ப்பாணம், திங்கள்

தீவுப்பகுதி நோயாளர் படகு நாகபூஷணியை உடனடியாகச் சேவையில் ஈடுபடுத்துமாறு தீவுப்பகுதி எம். பி பண்டிதர் கா.பொ. இரத்தினம் சுகாதாரசேவை அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள அவசரக்கடிதமொன்றில் கேட்டுள்ளார். திரு. இரத்தினம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

கடந்த ஜூலை மாதத்தில் இந்தப் படகைச் சேவைக்கு விடுவதாக அறிவித்திருந்தீர்கள். ஆனல் ஆகஸ்ட் மாதத்தில் எனக்குத் தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதமொன்றில் படகு விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளீர்கள். இப்படகு திருத்தி முடிந்துள்ளபோதிலும் சேவைக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதற்குரிய காரணமென்ன? கடந்த 2 மாதங்களில் படகின்மையால் இப்பகுதியைச் சேர்ந்த பல நோயாளிகள் இறந்துவிட்டனர். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென அரசாங்கம் கருதுமாகவிருந்தால் இப்படகை உடனடியாக அனுப்பி வைப்பதுடன் நெடுந்தீவு காரியாதிகாரி பொறுப்பில் நெடுந்தீவில் இதை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.'

...கோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு: வித்துவான் எவ் எக்ஸ். சி. நடராசா. யாழ்ப்பாணம்; க' குணராஜா (செங்கை ஆழியான்) யாழ் இலக்கிய வட்டம், கரவெட்டி: பண்டிதர் க, வீரகத்தி, ஹட்டன்: திரு. இரா. சிவலிங்கம், அதிபர், ஹைலன்ட் கல்லூரி. நீர்கொழும்பு: திரு சண்முகநாதன், இந்து வாலிபர் சங்கம், கடற்கரைத்தெரு. சிலாபம்; ஜனப் எஸ் எம் ஜே பைஸ்தீன், 'நூர் மஹால்'.

......

## குருப்பிரசாதியாக அபிஷேகம்

முசலி, ஞாயிறு

மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த வங்காலை என்னும் கிராமத்தில் பிறந்த வண. பிதா. ஆனந்தம் ரொம்சி குரூஸ். யாழ்ப்பாணம் உதவி மேற்ராணி ஆண்டகை வண. எல். ஆர். அன்ரனி அடிகளால் குருப்பிரசாதியாக அபிஷேகம் செய்யப்பட்டார்.

இவர் வங்காலைகிராமத்தின் ஏழாவது குருப்பிரசாதியாவார் வங்காலை கிறிஸ்தவ மக்கள் இவரை கௌரவிக்கும் முகமாக வங்காலையில் இம்மாதம் 30-ம் திகதி ஒரு விழா வெடுக்கின்ருர்கள் இதற்கான ஆக்கவேலைகளை வங்காலை கட்டளைகுரவர் திரு. பெணட் கொன்ஸ்ரன்ரைன் கவனித்து வருகிருர்.

மன்னர் மாவட்டத்தில்

## அபிவிருத்தி சபைகள்

முசலி, ஞாயிறு

சமீபத்தில் அரசாங்கத்தால் ஏற்படுத்திய அபிவிருத்தி திட்டசபைக்கிணங்க, மன்னர் மாவட்டத்தில் பதினெட்டுப் பகுதி அபிவிருத்திச் சபைகள் அங்குரார்ப்பணம் செய்வதற்கான ஆக்க வேலைகளை மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் கவனித்து வருகின்ருர்.

முசலிக்காரியாதிகாரி பிரிவுக்குள்ளான முதல் இரண்டு அபிவிருத்திச் சபைகள் இம்மாதம் 30-ம் திகதி மன்னர் மாவட்ட அரசாங்க அதிபரால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவிருக்கின்றன.

இச்சபைகள் தனது காரியாதிகாரி பிரிவுக்குள் முதல் முதலாக அமைக்கப்படவிருப்பதால் இதற்கான ஆரம்பவேலைகளை முசலிக் காரியாதிகாரி திரு. வைத்திலிங்கம் சொக்கலிங்கம் கவனித்துவருகின்ருர்.

...னத்துரை, வி. எஸ் ஐயாத்துரை, ஆர். தர்மரத்தினம், ஏ. ஆர். மனுவேற்பிள்ளை. டாக்டர் ஆர் கனகலிங்கம், திரு ஏ. காராளசிங்கம் ஆகியோரை கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை வர்த்தக அமைச்சருக்குப் சிபார்சு செய்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில்

## 10 புதிய கி.சேவையாளர் பிரிவுகள்

நல்லூர், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக பத்து கிராம சேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்படவிருக்கின்றன. ஏழாலை கிராமசேவையாளர் பிரிவு ஏழாலை வடக்கு, தெற்கு என இரண்டாகப் பிரியும். கிளிநொச்சியுள்ள உயிலங்குளம், உயிலங்குளம், புத்துவெட்டுவான் என இரண்டாகப் பிரியும். புளியம்பொக்கனை — புளியம் பொக்கனை, தர்மபுரம் என இரண்டாகப் பிரியும், அளவெட்டி—வடக்கு, தெற்காகப் பிரியும், சுன்னுகம்— சுன்னுகம், கந்தரோடை என இரண்டாகபிரியும். கைதடி- வடக்கு, தெற்காகப் பிரியும், புத்தூர் மேற்கு-புத்தூர் மேற்கு, ஆவரங்கால் எனப்பிரியும். உடுவில்-வடக்கு-தெற்காகப் பிரியும். சுழிபுரம்-கிழக்கு, மேற்காகப் புரியும். சங்கானை-கிழக்கு, மேற்கு-வடக்கு என மூன்கப் பிரியும்.

## பெருந்தொகை இரத்தினக்கற்கள் கைப்பற்றப்பட்டன

கோட்டை, ஞாயிறு

வேருவலை, எகலியகொடை, இரத்தினபுரி ஆகியஇடங்களிலுள்ள இரத்தினக்கல் வியாபாரிகளையும் புறக்கோட்டையிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களையும் உள்நாட்டு இறைவரிப் பகுதி அதிகாரிகள் சோதனையிட்டு பெருந்தொகையான இரத்தினக்கற்களைக் கைப்பற்றியுள்ளனர்.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தைச் சேர்ந்த 100 அதிகாரிகள் மேற்படி பரிசோதனையில் ஈடுபட்டனர்.

கைப்பற்றிய இந்த இரத்தினக்கற்களை மேற்படிவியாபாரிகள் வைத்திருக்க சட்டபூர்வமான உத்தரவு உள்ளதா என்பது குறித்து விசாரணை நடைபெறுகிறது.

...ரீதியான அறிவித்தல் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனல்மங்கோலியாவில் தலைவர் மா-ஓ செய்த அருஞ்செயல்கள் அடங்கியவரலாறுகளை சீனப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. மா-ஓ பிறந்த மாகாணமான புனைவ் மாகாணத்திற்கு ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் விஜயம் செய்வதாக பீகிங் வானெலி தெரிவித்தது. இவ்வறிவித்தலே அவரது பிறந்த தினத்திற்குரிய மறைமுக அறிவித்தலாகக் கருதப்படலாமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

......

## மாணவர் திகைப்பு

உடுப்பிட்டி, ஞாயிறு

ஜீ. சீ. ஈ. (உயர்தர)கலைப் பாடங்கள்பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த மாணவரொருவருக்கு ஜீ. சீ ஈ (உயர்தர] விஞ்ஞானப் பரீட்சைக்குரிய நேரசூசிகையும். பிரவேசப்பத்திரமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் அம் மாணவர் திகைப்படைந்துள்ளார்.

கரவெட்டி மேற்கைச்சேர்ந்த திரு பரமேஸ்வரன்என்னும் பரீட்சார்த்தியே இவ்வனுபவத்திற்குள்ளானவராவார்!

## கோரிக்கை

உடுப்பிட்டி, ஞாயிறு

வடபகுதியில் பனம்பொருள் கூட்டுத்தாபனம், கண்ணுடித் தொழிற்சாலை ஆகியன நிறுவப்படும்போது அவற்றிலேற்படும் வேலைவாய்ப்புகளில் யாழ் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கே முதலிடம் கொடுக்கவேண்டுமென்றும், இதனல் தொழில் நுட்பக கல்லூரியின் கல்வித்தரம் உயர வழிபிறக்குமென்றும் வணிகமாணவர்மன்றச்செயலாளர் திரு. க. மகேந்திரனும், பொறியியல் மாணவர் மன்ற உபசெயலாளர் திரு. சோ. சிவயோகநாதனும் கோரியுள்ளனர்.

## புதுரக மீன்பிடி வள்ளம்

கோட்டை, ஞாயிறு

எந்தவித காலநிலைகளிலும் சாதகமாக இயங்கத்தக்கதொரு மீன்பிடி வள்ளத்தை நிர்மாணிப்பதில் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது மற்றைய மீன்பிடி வள்ளங்களிலும் பார்க்க இந்த மீன்பிடி வள்ளம் விலை பாவனை ஸ்திரம் ஆகிய சகலவிதத்திலும் நன்மை பயப்பதாக அமையுமெனக் கூறப்படுகிறது.

...வேறொரு இடமுமில்லை. சிங்கள பௌத்த இளைஞர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்தேனும் சிங்களமொழியையும் கலாச்சாரத்தையும் பௌத்தத்தையும் காப்பாற்ற வேண்டும், சிங்கள இனமும். பௌத்தமும் நீடுழிவாழ வேண்டும்.

இக்கடிதம் மகாநாட்டில் வாசிக்கும் பொழுது திரு. ஆர். ஜி. சேனநாயக்காவின் உயிர் பிரியும் தறுவாயில் இருந்தது.

...தேறியவர் யாழ். கலைக்கழகச் செயலாளரான இவர் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். இரண்டாந்தர அதிபராக அண்மையில் பதவி உயர்வு பெற்ற இவர் சீன தாய்லாந்து கொங்கொங் இந்தியா முதலிய பல இடங்களுக்கு கல்வி சுற்றுலா மேற்கொண்டு அந்நாட்டுக் கல்வி முறைபற்றி ஆராய்ச்சி செய்துள்ளார் ... எழுத்தாளருமாவார்.

...செழுவை மீண்டும் தனிக் கிராமசேவையாளர் பிரிவாகவும், கோப்பாய் தெற்கிலிருந்து இருபாலையை மீண்டும் தனிக்கிராமசேவையாளர் பிரிவாகவும், பத்தமேனியிலிருந்து வளலாய் இடைக்காட்டைப் பிரித்து தனிக் கிராமசேவையாளர் பிரிவாகவும் ஆக்கித் தருமாறு கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளார்.


விற்பனையாகின்றது

'ஈழநாடு' தினக்குறிப்பு

1971

முற்றிலும் புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டு விசேஷமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

60 பக்கங்கள் கொண்ட தகவல்கள்

★ அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறைகள்
★ போயா விடுமுறைகள்
★ பாடசாலை தவணை விடுமுறைகள்
★ உலக - இலங்கை புவியியல், குடியியல் சரித்திரம் சம்பந்தமான குறிப்புகள்
★ தபால் தந்தி விகிதங்கள்
★ பஸ், புகையிரத, விமான சேவை நேர அட்டவணை
★ கிரகங்களின் அட்டவணை

[ இன்னும் பல குறிப்புகள் ]

விலை: ஒன்று 1 ரூ. 50 சதம்

வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

'ஈழநாடு' (வர்த்தக அச்சகப் பகுதி)

த.பெ. எண். 49 யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு உன்னுடையதை எடுத்துக்கொள்கிறவனிடத்தில் அதை திருப்பிக் கேளாதே. மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

— இயேசுநாதர்.

ஈழநாடு
Eelanadu [illegible] Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 689
[illegible] மார்கழி மாதம் 13-ந் திகதி (28-12-70)

## கோட்டையின் பெயர் மாற்றம்

திருக்கோணமலையில் பாடல்பெற்ற கோணேசர்ஆலயம் அமைந்துள்ள 'பிரடரிக்' கோட்டையின் பெயரை 'இராஜசிங்கன் கோட்டை' என்று மாற்றுவதற்கு கலாசார விவகார அமைச்சர் தீர்மானித்திருக்கிறார் அந்நிய ஆட்சியின் சின்னமாக அவர்கள் கட்டிய கோட்டைக்கு அவர்கள் சூட்டிய பெயரை மாற்றுவதற்கு இப்போதாவது முன்வந்த கலாசார அமைச்சரைப் பாராட்டத்தான் வேண்டும். இதேசமயம் புதிய பெயரை அவசரப்பட்டு அவரே ஒரு முடிவு செய்திருப்பது வரவேற்கக் கூடியதல்ல. சஞ்சிகைகள், பத்திரிகைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை சகல விஷயங்களுக்கும்விசாரணைக் குழுக்களும் உபகுழுக்களும் அமைத்தாராய்ந்து முடிவு செய்துவரும் ஒரு நல்ல முறையை அரசாங்கம் பின்பற்றிவரும் போது கலாசார விவகார அமைச்சர் மட்டும் இந்த விஷயத்தில் தமது விருப்பப்படி ஒரு முடிவுக்கு வருவது நல்லதாகத் தோன்றவில்லை.

இந்தக் கோட்டையினுள் தரிசாகக் கிடக்கும் முடிக்குரிய காணிகள் புதைபொருள் ஆராய்ச்சி நடத்துவதற்கு உரிய பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டு அங்கு புதைபொருள் ஆராய்ச்சி செய்வதன் மூலம் மறைந்து கிடக்கும் நம் புராதனப் பெருமையை அறிந்து கொள்ள வாய்ப்பேற்படும். புதைபொருளாராய்ச்சி நடத்துவதற்கு முன்வந்துள்ள கலாசார அமைச்சரை இந்நாட்டு மக்கள் நிச்சயம் பாராட்டுவர்.

கோணேசர் ஆலயம் அமைந்துள்ள இப்பகுதியில் சரியான முறையில் புதைபொருள் ஆராய்ச்சி செய்வதன் மூலம் இந்நாட்டின் தொன்மை பற்றி ஆதாரபூர்வ கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.

கோணேசர் ஆலயம் அமைந்துள்ள பகுதியைப் புனித இடமாகப் பிரகடனப்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை முன்னைய அரசாங்க காலத்தில் எழுந்ததும் அதற்கு எதிர்ப்புத் தோன்றி சர்ச்சை கிளம்பியதும் இதன் விளைவாக அன்றைய அமைச்சரவையில் அங்கம் வகித்த ஒரே யொரு தமிழரும் பதவியைத் துறந்து வெளியேறியதும் நாடறிந்த விஷயம்

இந்தக் கோட்டைப்பகுதி எவ்வளவுக்கு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறதோ அவ்வளவுக்குச் சர்ச்சைக்குரியதாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுப் புதிய சமுதாயத்தைக் கட்டிஎழுப்புவதற்கு உண்மையான தேசிய ஐக்கியத்தை உருவாக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ள இச்சமயத்தில் சர்ச்சைக்குரிய விஷயங்களில் ஓர் அமைச்சர் தாமே ஒரு முடிவைச் செய்து அறிவிப்பது நல்லதல்ல.

'பிரடரிக் கோட்டை' என்ற பெயர் கோட்டை வாசலில் பொறிக்கப்பட்டிருந்தாலும் கோணேசர் ஆலயம் அமைந்திருக்கும் இந்தக் கோட்டையை திருமலைப் பகுதியில் வாழும் மக்கள் மட்டுமல்ல வெளியிடங்களிலுள்ள மக்களும் 'கோணேசர் கோட்டை' என்றுதான் அழைத்துவருகிறார்கள்.

அந்நியர் பொறித்த பெயரை விட இந்நாட்டு மக்கள் மத்தியில் நீண்டகாலமாக வழங்கிவரும் 'கோணேசர் கோட்டை' என்ற பெயரையே அதற்குச் சூட்டுவது சர்ச்சைக்கிடமில்லாமலும் பொருத்தமாகவுமிருக்கும்

கோட்டைக்குப் பெயர் சூட்டும் விஷயத்தில் அவசர முடிவுக்கு வரவேண்டிய அவ

# "கடந்த காலச்சம்பவங்களை மறந்து நாட்டுக்காக ஒன்றுபட்டு உழைப்போம்"

### யாழ்ப்பாணத்தில் அமைச்சர்கள் இலங்கரத்தின, குமாரசூரியர்

யாழ்ப்பாணம், திங்கள்

சிங்களமக்கள் மத்தியிலுள்ள இரு அரசியல் கட்சிகளும் பிளவுபட்டிருந்தால் தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமைப்பட்டுத் தமது உரிமைகளைப் பெற முடியுமென்று தமிழரசுக்கட்சி நம்பிவந்த அரசியல் சித்தாந்தத்திற்கு 70-ம் ஆண்டுப் பொதுத்தேர்தல் நல்ல பாடம் படிப்பித்துவிட்டது

இவ்வாறு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின யாழ் நகர மண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய முன்னணி கொள்கை விளக்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார், திரு. ஏ. ரி. துரையப்பா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் தமிழ்க்காங்கிரஸ் எம். பி.க்கள் மூவரும் ஐக்கிய முன்னணி அரசை ஆதரித்தது போலத் தொடர்ந்து ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்,

அமைச்சர் இலங்கரத்தின தொடர்ந்து பேசியதாவது:

கடந்த காலங்களில் நாம் தவறு செய்யவில்லை என்று கூற முடியாது. கடந்துபோன தவறுகளுக்காக இப்போது வருத்தப்படுவதில் பயனில்லை. கடந்த காலத் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதனாலும் பயனெதுவுமில்லை. காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா சிங்கள மக்களை ஒற்றுமைப்படுத்தி இந்நாட்டுக்கேற்ற சோஷலிச அமைப்பை உருவாக்குவதற்கு முயன்றார். அதுபோல தற்போதுள்ள தமிழ்க்காங்கிரசாரும் தமிழ் மக்களை ஒருமுகப்படுத்தி இந்நாட்டை சோஷலிசப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கங்களும் சோஷலிசத்தைப் பற்றிப் பேசுவது இயல்பு 65-ம் ஆண்டு தேர்தல் முடிந்ததும் யு என் பி தமிழரசுக்கட்சியின் உதவியுடன் ஆட்சிக்கு வந்தது திரு. டட்லி சேனநாயகா தேசிய ஐக்கியத்தை தா[illegible]

பெருமைப்பட்டார். பதவிக்கு வருவதற்காகத் தமிழர் ஆதரவு பெற்ற திரு. டட்லி தேசிய ஐக்கியத்தைப் பற்றிப் பேசியது அவரது அரசியல் ஞானசூனியத்தைத் தான் காட்டுகிறது. சோஷலிச சமூக அமைப்பின் கீழ் தான் நாம் சுபீட்சமடைய முடியும் என நம்புகிறோம். நாம் எடுக்கும் சோஷலிச நடவடிக்கைகளுக்குத் தமிழ் மக்கள் பூரண ஆதரவு அளிக்க வேண்டும். தமிழ் பேசும் மக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கத்தின்மீது வைத்துள்ள நம்பிக்கையைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்மக்களின் அன்பையும் நம்பிக்கையையும் நான் பிரதமரிடம்எடுத்துச் சொல்லுவேன்.

உங்களது பிரதிநிதிகள் மூவர் எம்மை ஆதரித்து வருகின்றனர். அவர்கள் தமது கட்சியின் பெயரை மாற்றுவிட்டாலும் செயல் திட்டங்களை மாற்றவேண்டும். எமக்குக் கட்சி முக்கியமில்லை.

தபால் அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் பேசும்போது குறிப்பிட்டதாவது:

#### மக்களிடமே அதிகாரம்

கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் தென்னிலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அடைந்த அச்சத்தைப் போக்க எந்தத் தமிழ் தலைவரும் முன்வரவில்லை நானும் என் சில சகாக்களும் பொலிஸ் நிலையங்களில் படுத்துறங்கி ஆபத்து ஏற்படாவண்ணம் பாதுகாத்தோம். தேர்தல் முடிந்தபின் தமிழ்மக்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உரியவனாக நான் ஆக்கப்பட்டேன். நாம் மக்களிடமிருந்து பெற்ற அதிகாரத்தை மக்களிடமே திரும்பவும் ஒப்படைத்துள்ளோம். மக்கள் கமிட்டியில் தொழிலாளர் சங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றின் மூலம் நிர்வாகம் நடைபெறும்.

இந்நாட்டில் கலைகலாசாரம், மதம் என்பன அழிந்து விடுமென்று புதிய அச்சமொன்றைச் சிலர் ஏற்படுத்திவருகின்றனர். ஆனால் நமது நாட்டில் இவை ஒருபோதும் அழியப்போவதில்லை தமிழினம் தம்மிடையேயுள்ள கலைஞர்களை எழுத்தாளர்களை ஊக்குவிக்கத்தவறுமானால் நிச்சயம் தமிழினம் அழிந்தேதீரும்.

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் மக்கள் இரு அரசியல் கட்சிகளை வளர்த்துவந்தனர். இவை இரண்டும் தமிழருக்குச் செய்தது ஒன்றுமில்லை ஒன்றையொன்று திட்டித்தீர்ப்பதில் முன்னிற்கின்றன. ஆட்சிமன்றத்திலும் இவர்கள் இதைத்தான் செய்கின்றனர். இப்படியான அரசியல்கட்சிகள் தமக்குத்தேவை தானா என்பதைத்தமிழ்மக்கள் சிந்திக்க வேண்டும்.

அமைச்சர் குமாரசூரியர் மேலும் பேசியதாவது:

சூழ்நிலைமாறுகிறது ஆனால் நாம் மட்டும் சிறுசிறுவித்தியாசங்களைப்பாராட்டி முன்னேறமுடியாமல் பின்னிற்கிறோம்: புதிய உலகமொன்றினை உருவாக்க வேண்டிய பொறுப்பு இளைஞர்கையில் தான் உண்டு. தமிழ்மகன் சிங்களப் பெண்ணை மணமுடிப்பதும் சிங்களமகன் தமிழ்ப்பெண்ணை மணமுடிப்பதும் தவறான எண்ணமாக நம்மால் கருதப்பட்டு வருகிறது. அப்படி அவர்கள் திருமணம்முடித்தால் இன்பமாக வாழமுடியாதா:

நாம் இலங்கையர் என்ற நோக்குடன் செயல்படாதவரை உரிமைபெற்றவர்களாக வாழமுடியாது இந்த நாடு சிங்கள மக்களுக்கோ இஸ்லாமிய மக்களுக்கோ மட்டும் சொந்தமானதல்ல. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட சரித்திரத்துடன் கூடிய நமக்கும் இந்தநாடு சொந்தமானது.

#### கூட்டணியில் நான்கு கட்சிகள்

திரு ஏ ரி துரையப்பா தமது தலைமையுரையில் கூட்டணியில் இப்போது மூன்று கட்சிகள்மட்டுமில்லையென்றும் தமிழ்க்காங்கிரஸுடன் சேர்ந்து நான்கு கட்சிகள் இருப்பதாகவும், கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் தமிழரசுக்கட்சி செத்துவிட்டதென்றும் சொன்னார்.

நல்லூர் எம் பி திரு சி அருளம்பலம் பேசுகையில் சிங்களமக்கள் தமிழும்தமிழ் மக்கள் சிங்களமும் படிக்க வேண்டுமென்றும் தமிழ்க்காங்கிரஸ் ஐக்கியமுன்னணி அரசின் முற்போக்குத் திட்டங்களை ஆதரிக்குமென்றும், தவறிழைக்கும் பட்சத்தில் காங்கிரஸ் அரசாங்கத்தை எதிர்க்குமென்றும் சொன்னார்

வட்டுக்கோட்டை எம் பி திரு திரு ஆ தியாகராசா பேசுகையில், அமைச்சர் குமாரசூரியர் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் தமிழ் பேசும்மக்கள் பூரண ஆதரவளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

மற்றும் பலரும் பேசினர்

## புதிய தேசியகீதம்

கோட்டை, ஞாயிறு

இலங்கையின் தற்போதைய தேசிய கீதமான நமோ நமோ மாதா...என்று ஆரம்பிக்கப்படும் கீதத்தை விடுத்து புதியதொரு தேசிய கீதம் கொண்டுவரப்படலாம்:

கலாச்சார அமைச்சர் திரு எஸ். எஸ். குலதிலகா இலங்கையின் தேசிய கீதத்தை மாற்றவேண்டும் எனக் கோரும் ஒரு தீர்மானத்தை ஏற்கனவே கொண்டுவந்துள்ளார்.

இதன்பொருட்டு கலாச்சார அமைச்சு ஒரு குழுவொன்றை நியமிக்கவுள்ளது. இக்குழுவில் இசைவல்லுனர்கள் கவிஞர்கள் ஆகியோர் இடம்பெறவுள்ளனர்

## நோயாளர் படகுசேவை

யாழ்ப்பாணம், திங்கள்

தீவுப் பகுதியில் நோயாளருக்கான படகுசேவைஇம்மாத இறுதியில் ஆரம்பிக்கப் படவிருப்பதாக சுகாதார சேவைப் பணிப்பாளர் தொகுதி எம். பி. கா. பொ. இரத்தினத்துக்கு அறிவித்துள்ளார். ......

## யாத்திரிகர் உல்லாசப் பிரயாண திட்டம்

கோட்டை, ஞாயிறு

கலாச்சாரஅமைச்சர் திரு எஸ். எஸ். குலதிலக இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கும் இந்தியாவில் இருந்து இலங்கைக்குவரும் யாத்திரிகர்களுக்கும் நன்மை பயக்கத்தக்க வகையில் அவர்களின் தேவையைக் கவனிக்க யாத்திரிகர் உல்லாசப் பிரயாண திட்டமொன்றைத் தயாரிக்கிறார்.

இத்திட்டத்தின்கீழ் கலாச்சார அமைச்சு யாத்திரிகர்களுக்கு இந்தியாவுக்குச்செல்வதற்கும் இலங்கைக்கு வருவதற்கும் உல்லாசப் பிரயாணங்களை ஒழுங்குசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கான்ஸ்டபிள்கொலைமுயற்சி வழக்கில் எதிரி விடுதலை

மல்லாகம், ஞாயிறு

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை அவரது கடமை நேரத்தில் றிவோல்வரால் சுட்டுக் கொலைசெய்ய முயன்றதாக சங்கானைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில், மல்லாகம் நீதிபதி திரு எஸ் ஆனந்குமாரசாமி எதிரியை விடுதலை செய்தார்.

இவ் வழக்கில் தொண்டமனாற்றைச் சேர்ந்த காஞ்சிமாவடிவேல் என்றழைக்கப்படும் செல்லையா வடிவேலு என்பவர் சென்றவருடம் ஜூன் மாதம் ஆறும் திகதி சங்கானைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் என் கே சந்திரத்ன என்பவரை றிவோல்வரால் சுட்டுக் கொலை செய்ய முயன்றதாக சங்கானைப் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர் ஜே செல்வரத்தினத்தினதின் அனுசரணையுடன் திரு ஆர் ஈ தம்பிரத்தினம் [illegible]

கோஷ்டியினர் சுழிபுரத்தைச் சேர்ந்த நெல்லியான் சந்தியில் காவல் நின்றதாகவும் அச்சமயம் ஒரு லொறி வேகமாக வந்ததாகவும், லொறியை நிறுத்தும்படி இன்ஸ்பெக்டர் நடுரோட்டில் நின்று சைகைசெய்ததாகவும், அதனை ஏற்காமல் லொறிச்சாரதி லொறியை அசுர வேகத்தில் செலுத்தி வந்ததாகவும், இதனால் இன்ஸ்பெக்டர் பாதையை விட்டு விலக லொறி மரத்துடன் மோதி நின்றதாகவும், அச்சமயம் முன் ஆசனத்திலிருந்த எதிரி இறங்கி ஓடியதாகவும், அவரைத் துரத்திக்கொண்டு ஓடிய கான்ஸ்டபிள் சந்திரரத்னவை நோக்கி றிவோல்வரால் எதிரி சுட்டதாகவும், ஆனால் அச் சூடு பிடிக்கவில்லையென்றும், சந்திரரத்ன எதிரியைப் பிடித்தபொழுது இருவரும் விழுந்து புரண்டதாகவும், அச்சமயமும் எதிரி றிவோல்வரால் சுட்டதாகவும், அச்சூடும் கான்ஸ்டபிளைத் தாக்கவில்லையென்றும், அ[illegible]

## இன்று

## மாசில்லாக் குழந்தைகள்

இன்று கத்தோலிக்கத் திருச்சபை மாசில்லாக் குழந்தைகளின் திருநாளைக் கொண்டாடுகிறது. கிறீஸ்துவுக்காய் தம்உயிரைப் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நேர்மையின் உறைவிடம்'

## யாருடைய மோதிரம்

யாழ்ப்பாணம், திங்கள்

கீரிமலைக் கேணிப் படியில் பவுண் மோதிரம் ஒன்றைக் கண்டெடுத்த வலிவடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் [illegible]

கேணேசர் ஆலயம் அமைந்துள்ள இப்பகுதியில் சரியான முறையில் புதைபொருள் ஆராய்ச்சி செய்வதன் மூலம் இந்நாட்டின் தொன்மை பற்றி ஆதாரபூர்வமான பல தகவல்கள் ...ரையே அதற்குச் சூட்டுவது சர்ச்சைக்கிடமில்லாமலும் பொருத்தமாகவுமிருக்கும்.

கோட்டைக்குப் பெயர் சூட்டும் விஷயத்தில் அவசர முடிவுக்கு வரவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

65-ம் ஆண்டு தேர்தல் முடிந்ததும் யு என் பி தமிழரசுக்கட்சியின் உதவியுடன் ஆட்சிக்கு வந்தது. திரு. டட்லி சேனநாயகா தேசிய ஐக்கியத்தை தா[...] கட்டி எழுப்பிவிட்டதாகப்

# “தியாகி கந்தசாமியின் மறைவு என்மனதை விட்டகலவில்லை”

## சங்கானையில் அமைச்சர் இலங்கரத்ன

சங்கானை, ஞாயிறு

‘நாம் எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற நிலையில் செயற்படவேண்டும். அப்போதுதான் எமது எதிர்கால சந்ததியினர் ஒருமைப் பாட்டுடன் வாழமுடியும். மக்களின் மறுமலர்ச்சிக்காக எமது அரசாங்கம் புதிய புதிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. அதற்கு மக்கள் சகல வகைகளிலும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் அப்போதுதான் மக்கள் நல்ல பயனை அடைவார்கள். இந்நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்காக பல தேசியத் தலைவர்கள் அல்லும் பகலும் உழைத்து வந்திருப்பதை நலம் காணக் கூடியதாக இருக்கிறது. அந்த ஒத்துழைப்பு மென்மேலும் வளர்ச்சி அடைய வேண்டும், அரசியல், சமூக, கலை, கலாச்சார சுதந்திரம் மக்களுக்கு எப்படி வேண்டியதொன்ருகக் கருதப்படுகிறதோ அதேபோல பொருளாதார சுதந்திரமும் மக்கள் வாழ்விற்கு இன்றியமையாததாக அமைகிறது. சோஷலிச நாடுகளில் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டே அரசியல் அமைக்கப்படுகின்றது. அது போன்ற அரசுதான் மக்கள் தேவையை பூர்த்தி செய்யும்’

இவ்வாறு வலி-மேற்கு ப. நோ. கூ. ச. சமாசத்தின் மின்தறி நெசவாலை துணி செப்பனிடும்ஆலைக்கட்டிடத் திறப்பு விழாவில் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பீ. இலங்கரத்தின பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். தபால் தந்தி இலாகா அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் இலங்கரத்தின குறிப்பிட்டதாவது:

திரு. பண்டாரநாயக்காவுடன் சேர்ந்து கொண்டதின் பலனுக இந்நாட்டு மக்களின் நிலையை ஓர் அளவில் உணரக்கூடிய வாய்ப்புக் கிட்டியது. அவரது சேவையையும் சிறந்த மனப்பான்மையையும் பதினான்கு வருடங்களுக்குப் பின்புதான் மக்கள் உணர்ந்துள்ளனர். அதன் பலனைத்தான் கடந்த பொதுத் தேர்தலின் முடிவு எடுத்துக் காட்டியுள்ளது. தேசிய ஒற்றுமைக்காக சேர் பொன்னம்பலம் இராமநாதன், பொன். அருணுசலம் போன்ருேர் ஆற்றிய சேவையும் தியாகி கந்தசாமியின் மறைவும் எனது மனதைவிட்டு அகலவில்லை.

நாட்டின் பொருளாதார சிக்கலத்துக்காக சில துறைகளை அரசாங்கம் தனதாக்கிக் கொள்கிறது. கூட்டுறவு தேச பொருளாதாரத்தை வளர்க்கும். அத்துடன் அவ்வப்பகுதி மக்களின் தேவைகளை உணர்ந்து செயலாற்றும் வலி. மேற்கு சமாசத்தில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொருயார் துணியும் அந்நிய செலவாணியை மிச்சம் பிடிக்கும் கைத்தொழில் விவசாயம் போன்றவற்றிற்கு, அரசு பக்கபலமாக நிற்கும் என்பது உறுதி. மிளகாய், வெங்காய உத்தரவாத விலைபற்றி நாம் பரிசிலனை செய்து வருகிரேம், சந்தேகக்கண் கொண்டு எம்மை நோக்காமல் பரஸ்பர நல்லெண்ணத்துடன அரசுக்கு ஆதரவளியுங்கள்’

தலைவர் திரு. செ. குமாரசூரியர் தமது தலைமையுரையில், தேசிய ஒற்றுமை வளர வேண்டும். அப்போதுதான் எம்நாடு பொருளாதார முன்னேற்றம் அடையமுடியும். இதற்கு எமது மக்கள் அரசாங்கத்திற்கு ஒத்தாசை புரிய வேண்டும் என்றூர்.

வட்டுக்கோட்டைத் தொகுதி எம் பி. திரு. ஆ. தியாகராசா பேசுகையில் வடக்கு தெற்கு, கிழக்கு என்ற பேதமின்றி இவ்வரசாங்கம் சேவை ஆற்றுகிறது என்றும், கடந்த ஆறுமாதங்களில் அரசாங்கம் பொருளாதார வளர்ச்சி அடைய திட்டங்களை வகுப்பதோடு ஆட்சித் திட்டத்தையும் வகுத்துவருவதாகவும் இவை இன்னும் சில மாதங்களில் முடிவடையும் என்றும் இதனுல் நாடு நலம்பெற்று நாமும் நலம் அடைவது திண்ணம் என்றும், இதற்கு கட்சி பேதமின்றி பழையவற்றை மறந்து சகலரும் ஒன்றுபட்டு உழைத்து நாட்டின் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

விழா ஆரம்பத்தில் தபால் தந்திஅமைச்சர் திரு. குமாரசூரியர் சங்கானை கிழக்கு மத்திய பல நோக்குக் கூட்டுறவு சங்க முன்றலில் கூட்டுறவுப் பிரமுகர்களாலும் பொது மக்களாலும் வரவேற்கப்பட்டு மேளவாத்தியங்கள் சகிதம் சமாசவிழா முன்றலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலத்தில் வட்டுக்கோட்டை பா உறுப்பினர் திரு ஆ தியாகராசாவும் கலந்து கொண்டார். முன்னைநாள் சமாசத் தலைவர் திரு வேதாபரணத்தின் உருவப் படம் தபால் தந்தி அமைச்சரால் திரைநீக்கம் செய்துவைக்கப் பட்டது.

இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்தி[...] அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கர்ப்பிணிகள் கஷ்டம்

உடுப்பிட்டி, ஞாயிறு

அல்வாய் தெற்குப் பகுதியில் மருத்துவமாது இல்லாததால் இப்பகுதிக் கர்ப்பிணிகள் பெரும் கஷ்டமும் சிரமமுமடைந்து வருகின்றனர். இங்கு முன்னர் மருத்துவமாதாகக் கடமையாற்றிய மகேஸ்வரி ஆறுமாத காலத்திற்கு முன்பு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் இங்கு மருத்துவமாது ஒருவரும் நியமிக்கப்படவில்லை.

## மாசிலாக் குழந்தைகள்

இன்று கத்தோலிக்கத் திருச்சபை மாசில்லாக் குழந்தைகளின் திருநாளைக் கொண்டாடுகிறது. கிறீஸ்துவுக்காய் தம்உயிரைப் பலியாக்கினர் இச்சிறுவர். இவர்கள்தான் மாசிலாக் குழந்தைகள் என்பதை இச்சிறுகட்டுரை விளக்குகிறது.

கீழ்த்திசையிலிருந்து வந்த சோதிடசாஸ்திரிகளான அரசர்கள் ஏரோதனிடம் சென்று யூதர்களின் ராசாவின் பிறப்பை விசாரித்த போது வெகுண்டெழுந்தான் ஏரோதன். வேதபராகர் மூலம்அறிந்து 3சோதிட சாஸ்திரிகளும் இடத்தை அறிவித்தான். ஆனுல் ஒரு நிபந்தனையுடன். ‘நீங்கள் சென் யூதரின் ராசாவை வணங்கியபின் எனக்கும் அறிவியுங்கள் நானும்அவரை ஆராதிக்க வேண்டும் என்று கபடமாகக்கூறி அனுப்பினுன் அந்தஅரசர்கள் சென்று யேசுவை வணங்கினர்.

தேவதூதரின் ஏவுதலின்படி இந்த மூன்று அரசரும் தாம் வந்த வழியால்செல்லவில்லை வேறு பாதையால் சென்றனர். இவர்களின் வரவை எதிர்பார்த்திருந்த ஏரோதன் ஏமாற்றமடைந்தான். ஏமாற்றப்பட்டு விட்டேனே என்ன செய்வது என்று ஆலோசனை செய்து முடிவுக்கு வந்தான் பெத்தலேகமிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகளைக் கொல்லும்படி கட்டளை பிறப்பித்தான்.

இச் செய்தியைத் தேவதூதர் ஒருவர் சூசையப்பருக்கு நித்திரையில் தெரிவிக்கவே அவர் எழுந்து யேசுவையும் அவரது தாயாரான தேவதாயையும் கூட்டிக் கொண்டுஎகிப்து தேசத்திற்கு ஓடிப்போனுர்கள். ஏரோதனின் சேவகர்கள் புறப்பட்டு பெத்தலகேமிலும் அதன் சுற்றுப்புலங்களிலுமுள்ள இரண்டு வயதிற்குட்பட்ட ஆண்குழந்தைகளை வெட்டிக் கொன்றூர்கள். ஊர்முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டது. ஏரோதன் தனது திட்டம் நிறைவேறிவிட்டதாக மகிழ்ந்தான். ஆனுல் பாலகயேசு காப்பாற்றப்பட்டார்.

யேசுவிற்காகக் கொல்லப்பட்ட இச்சிறுவர்கள் தம் இரத்தத்தைசிந்தி வேதசாட்சிகளாக மரித்தனர் இவர்கள்தான் மாசில்லாக் குழந்தைகள் இவர்களின் ஞாபகத்தைத்தான் திருச்சபை இன்று கொண்டாடுகிறது.

இ. பேர்ருெட்

## ‘நேர்மையின் உறைவிடம்’

‘நுணுக்கமாக கணக்கு வழக்குகளைப்பார்க்கவென்று வந்து, ‘பிழைபிடிப்பதுதான் எங்கள் தொழில்’ என்று கூறிய கல்வி இலாகா கணக்காய்வாளர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில்விடுதிச்சாலைக் கணக்குகளில்ஒரு குறைபாடும் காணமுடியாமல் அதை வைத்திருப்பவர் திறமைசாலி, நேர்மையானவர் என்று பாராட்டினுர்கள். அப்பாராட்டைப்பெற்றவர்தான் திரு. நமசிவாயம்’ என்று கோம்பையன் மணல் மயானத்தில் திரு. நமசிவாயத்தின் பூதவுடல் தனகத்தின்முன் அஞ்சலி செலுத்திப்பேசிய விடுதிச்சாலை அதிபர் திரு. கே. எஸ். சுப்பிரமணியம் குறிப்பிட்டார். மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்துக்கல்லூரி விடுதிச்சாலையில் உணவு ஒழுங்கு எல்லாவற்றையும் பலரும் போற்றும் வகையில் கண்காணித்த திரு நமசிவாயத்தின் ஈமக்கிரியைகளின் போது அதிபரும் பெருந்திரளான ஆசிரியரும் மாணவர்களும் நண்பர்களும் துக்கம் தெரிவிக்கத் திரண்டிருந்தனர்.

திரு கே. எஸ். சுப்பிரமணியம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- ‘நற்பண்புகள், கடமையுணர்ச்சி, நேர்மை, எளிமை முதலியன நலிந்து வரும் காலத்தில் இவரைப்போன்ருேருக்கு ஈடுசெய்வது பெரும் கஷ்டம். விடுமுறை நாளன்று வரை தன்கடமையைக் கண்ணெனக்கருதி, உடல் நலக் குறைவையும் பொருட்படுத்தாது, எல்லாருக்கும் தவணை முடிவு விருந்து ஏற்பாடு செய்தார் வழமையாக ‘நஷ்டம், வீண் பொருட்செலவு’ என்று இவ்விருந்தைத் தட்டிக்கழிப்பவர் இம்முறை அதிபர், பதில் அதிபர் முதலியோர் விலகுவதை மனதில் கொண்டு போலும் இரண்டு மூன்று வாரங்களுக்குமுன்னதாகவே பிரமாத ஏற்பாடு செய்தார் தன் பிரியாவிடை விருந்தெனஅப்போது உணர்ந்தாரோ?’

‘கல்லூரியிலேயே காலை, மாலை, இரவு, பகல் முழுநேரத்தையும் செலவிட்டவர். ஊழியரையும் அன்பால் வென்றவர். மாணவர் புரளிசெய்தாலும் என்னிடம் சொல்வதாக மிரட்டுவதன்றி என்னிடம் கோள் சொன்னவரல்ல. ஏனென்று கேட்டால் ‘அதுசிறுபிள்ளைத்தனம், உணர்ந்து திருந்திவிடுவார்கள்’ என்று மழுப்பி ஆனுல் மாணவர்களை நல்வழிப்படுத்தியவர்’.

இவ்வஞ்சலியில்உரையாற்றிய திரு. இ. மகாதேவா, இந்துகல்லூரியின் ஒருதூண் சரிந்து கிடக்கிறதே என்று அங்கலாய்த்தார்.

கடைசிநாளன்றும் கல்லூரிக்கு வந்தவர் கார்த்திகை திருநாளன்று மரணமானுர் என்ற செய்தியை விடுமுறை காலத்தில் கேட்டதும் இத்துணை மக்கள் திரண்டது நன்றியுணர்ச்சி, உண்மைக்கு மதிப்பு, உலகத்தில் இன்னும் சூனியமாகிவிடவில்லை. என்பதைக் காட்டுவதாயிருந்தது.

—அன்பன்

## மோதிரம்

யாழ்ப்பாணம், திங்கள்

கீரிமலைக் கேணிப் படியில் பவுண் மோதிரம் ஒன்றைக் கண்டெடுத்த வலிவடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்தைச் சேர்ந்த திரு. ஓ. விஜயசுந்தரம் அதை ‘ஈழநாடு’ காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். மோதிரத்துக்குரியவர் காரியாலய நேரத்தில் ‘ஈழநாடு’ அலுவலகத்தில் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

......

## ஆபாச இலக்கிய ஆய்வுக் கமிட்டி

கோட்டை, ஞாயிறு

வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் ஆபாச இலக்கியங்கள் குறித்தும் உள்நாட்டில் வெளியாகும் இலக்கியங்கள் குறித்தும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலக கமிட்டி யொன்றை நியமித்துள்ளார்.

இக்கமிட்டி ஆபாச இலக்கியங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள்ஆகியனகுறித்தும் அவற்றைத் தடைசெய்வது குறித்தும் அமைச்சருக்கு ஆலோசனை கூறும்.

11 அங்கத்தவர்களைக் கொண்ட இவ்வாலோசனைக் கமிட்டியில் பின்வருவோர் இடம் பெறுகின்றனர்: திருவாளர்கள் ரத்தினதேசப்பிரியா (தலைவர்), குணசீலவிதான, கருணசேனஜயலத், தர்மசிறி ஜெயக்கொடி, நிமால் ஹொரண இந்திரபால அபேவீர, பவெந்தரா குணவர்த்தன, பிரேம்ஜி ஞானசுந்தரம், சுகதமுனி ஞானசிறி, சரத்கூரே, ஆரியவன்சா பத்திராஜா, ஜனுப் எச். எம் பி. மொஹிதீன்.

மேற்படிகமிட்டியின் 1வது கூட்டம் அடுத்தாண்டு ஜனவரி மாதம்15ம் திகதி நடைபெறவிருக்கிறது.

திரு எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர் ஜே செல்வரத்தினதினத்தின் அனுசரணையுடன் திரு ஆர் ஈ தம்பிரத்தினம் ஆஜரானுர். சங்கானை பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு செனிவிரத்ன வழக்கை நடத்தினுர்.

வழக்கு விசாரணையின் பொழுது 69ம் ஆண்டு ஜூன் அதிகாலை 1.15 மணிக்கு சங்கானைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத்தகவல் ஒன்றைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் திரு எச். பி ஜெயசூரியா கான்ஸ்டபிள் சந்திரரத்ன ஆகியோர் உட்பட ஒரு பொலிஸ் [...]ரத்ன எதிரியைப் பிடித்தபொழுது இருவரும் விழுந்து புரண்டதாகவும், அச்சமயமும் எதிரி றிவோல்வரால் சுட்டதாகவும், அச்சூடும் கான்ஸ்டபிளை தாக்கவில்லையென்றும், அப்பொழுது அவ்விடத்திற்கு வந்த இன்ஸ்பெக்டர் எதிரியை றிவோல்வரின் பின் பக்கத்தால் தாக்க கான்ஸ்டபிள் குண்டாந்தடியால் தாக்கியதாகவும், எதிரிவந்த லொறியில் பல்லாயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்கள் இருந்ததாகவும் கூறப்பட்டது விசாரணையின் பின்னர் குற்றச்சாட்டுநிருபிக்கப்படாததால் நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## ‘புள்ளிவிபரப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்’

யாழ்ப்பாணம், ஞாயிறு

“தற்போது நாட்டில் எத்தனை பட்டதாரிகள் இருக்கிருர்கள் அவர்கள் ஒவ்வொருவரது தகைமைகள் என்ன என்பது குறித்து விரிவான பட்டியலோ அறிக்கையோ இல்லை. இத்தகைய தொரு பட்டியல் இன்றி அரசாங்கத்தால் பட்டதாரிகளது தகைமைகளுக்கேற்ப வேலை வாய்ப்புக் கொடுத்து அவர்களால் நன்மை பெறுதல் என்பது இயலாத காரியம். எனவே முதலில் ஆகக்குறைந்தது. 1960-ம் ஆண்டிலிருந்தாவது பட்டதாரிகளின் புள்ளிவிபரங்களையும் அவர்களது தகைமைகளையும் விரிவாக அரசாங்கம் எடுக்க வேண்டும்.’’

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தபால் தந்தியமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரிடம் சமர்ப்பித் அறிக்கையில் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

அம்மகஜரில் மேலும்குறிப்பிட்டுள்ளதாவது:- ‘சமீபத்தில் மக்கள் அரசாகம் தான் கூறியபடி பட்டதாரிகளை அவர்களது தகைமையடிப்படையில் ஆசிரியர் பதவிக்கு தெரிவு செய்யவில்லை.

பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும் போது அவர்களில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், குடும்பபொறுப்பு உள்ளவர்களுக்கும், தங்கள் பட்டப் படிப்புக்காகக் கடன் பெற்றவர்களுக்கும் முதன்மையளிக்கப்பட வேண்டும். அடுத்து ஆங்கிலம், அரசகரும மொழியாகியவற்றில் தேர்ச்சியில்லாத வர்களுக்கு இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் அறிவைப் பெற்றுக்கொள்ளவும் தங்கள் அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் தக்கவகையில் 6 மாதகாலம் இம்மொழிகளில் நல்ல பயிற்சியளிக்க வேண்டும்.

## மதியுரைக் குழு

முசலி, ஞாயிறு

மன்னூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாந்தைக் காரியாதிகாரி பிரிவு மதியுரைக் குழுவின் நிர்வாகிகளாகக் கீழ்க்காணப்படுவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

லிகிதர் சேவை: திரு எஸ் கே கனகசபாபதி (பிரதம லிகிதர்), கிராமசேவையாளர் சேவை: திரு அகஸ்ரின் சவிரியான், திரு சின்னையா சிவஞானம், வெளிக்கள உத்தியோகத்தர் சேவை: திரு ஜே மரியநாயகம் (காணி அபிவிருத்தி மேற்பார்வையாளர்), திரு ஏ ஏ லெம்பேட் (காணி அபிருத்தி மேற்பார்வையாளர்)

## தீயில்வெந்து பசு மரணம்

மாவிட்டபுரம், ஞாயிறு

வீடு தீக்கிரையானதால் அதற்குள்நின்ற பசுமாடு ஒன்றும் கருகி இறந்தது. இச் சம்பவம் மல்லாகத்தில் இடம் பெற்றது. பணப் பிரச்னை காரணமாக வீட்டுக்குத் தீவைக்கப்பட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டதை யடுத்துப் புலன் விசாரணையில் ஈடுபட்ட சுன்னுகம் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு வி எட்வேட், எஸ் துரைசிங்கம் என்பவரைக் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார். சந்தேக நபரை 300 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி திரு எஸ் ஆனந்தக்குமாரசாமி விசாரணையை அடுத்த மாதம் 13ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org